388

388
3.52

ஸம்புடம் 11
ஸஞ்சிகை 7

ஸ்ரீ:

நந்தன வூ
ஆடி மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्यतूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0-4-0

JULY 1952
VOL 11 NO 7

7L
[illegible], N41 SH
N52.11.7
199535

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ... 147
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

2. கண்ணிநுண்சிறுத்தாம்பு ... 150
[ஸ்ரீ. உப. கோழியாலம் சடகோபாசார்யர்ஸ்வாமி, ந்யாயமீமாம்ஸாசிரோமணி, திருப்பதி.]

3. ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம் ... 153
[ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

4. தேவகிசிங்கமாகிவந்த தெள்ளியசிங்கம் ... 156
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]

5. உபயவேதாந்தஜகண்ட்யம் ... 159
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட். திருச்சி.]

6. நந்தனோத்ஸவ நினைவுகள் ... 162
[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]

7. தேவபாஷை ... 163
[ஸ்ரீ. உப. கல்யாணபுரம், ஈச்சம்பாடி, T. ராமஸ்வாமி ஐயங்கார், M.A.,L.T,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை கௌரவாத்யக்ஷர், சென்னை.]

8. நம்முடைய ஸமூஹ வாழ்க்கையின் நிலைமை ... 166
[ஸ்ரீ. உப. C. R. க்ருஷ்ணமாசார்யஸ்வாமி, கடலூர்.]

9. ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சநத்திற்கு பதில் ... 169
[ஸ்ரீ. உப. வில்லிவலம், க்ருஷ்ணமாசார்யஸ்வாமி, ந்யாயசிரோமணி,
வேதாந்தவித்வான், திருவள்ளூர்.]

சாஸ்த்ராநுபந்தம்

ப்ரகீர்ணகம்

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 | நந்தன ௵ ஆடி ௴ | ஸஞ்சிகை 7

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

பக்தி தபஸோ ஶரணாகதி தபஸோ ஒரு தபஸின் ப்ரபாவத்தால் ஸந்தோஷிதரான தேவனுடைய அநுக்ரஹ ஸங்கல்பத்தால் ச்வேதாச்வதரர் மோக்ஷஸித்தி பெற்றாரென்று கூறியது. ‘தேவன்’ என்பது ஆசார்யதேவனையும் பரமாத்மதேவனையும் குறிப்பதென்று ‘யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ’ என்ற அடுத்த கடைசி மந்த்ரத்தால் விளக்கப்பட்டது. தேவனிடம் ப்ரதிபத்தியைப்போல் தேவனையடைய வழிகாட்டும் ஆசிரியரிடமும் பரபக்திவேணுமென்று இருவர்விஷயத்தில் பரபக்திஶப்தம் படிக்கப்பட்டது. அத்தோடு உபநிஷத்து முடிந்தது. ப்ரபஞ்சம்முழுவதற்கும் தாயான பகவதநுகம்பாதேவியின் ப்ரியப்படி நான் எப்பொழுதும் நடப்பவன். இங்கே ‘நிகிலஜகந்மாதா: ஸ்வாமிந: ப்ரியம்’ என்று இருக்கிறது. ஜகந்மாதாவான பெரியபிராட்டியாரே தயாதேவி வடிவாகப் பெற்றதாயாரென்று கொள்ளலாம். ‘தத்’ என்பது கீதையில் கூறியபடிக்கும் ஸஹஸ்ரநாமத்தில் கூறியபடிக்கும் பகவானுக்குத் திருநாமமாக இங்கே கொள்ளலாம். ‘ஸகல குணஸேவ்யா’ என்று கூறியது தயாசதகத்தில், ‘வ்ருஷகிரிக்ருஹமேதிகுணா: போதபலைஶ்வர்யவீர்யஶக்திமுகா: । தோஷா பவேயுரேதே யதி நாம தயே த்வயா விநாபூதா: ॥’ என்கிற ச்லோகத்தில் காட்டப்பட்டதை அதன் வ்யாக்யாநங்களில் விஸ்தரித்துள்ளோம். குணங்கள் குணமாவதே அவற்றின் குணம் என்னும் புகழ்ச்சிப்பெயராலேதான். உன்னோடு கூடியிருப்பதால்தான்–உன்னை அநுஸரிப்பதால்தான். இல்லையேல் தயையைவிட்டுப் பிரிந்துவிட்டால், ஶக்தி, ஜ்ஞாநம் முதலியதெல்லாம் உலகத்தை தண்டிக்கும் கொடிய ஹிம்ஸாதோஷங்களே– இன்னல்களேயாகும். குணங்களென்ற பேரைப் பெறுவதற்காக அந்த தர்மங்கள் உன்னை யநுஸரித்துப் பணிசெய்யவேணும். தயை கலசாவிடில் க்ரூர தண்டனைகளே நடக்குமாதலால் ‘கொடும்பாவி’ என்று திட்டே வரும். குணமென்று புகழ்ச்சி கிடையவேகிடையாது. பகவானுக்குப்பணிந்து நடப்பவரைக் காப்பதிலும், அவரோடு எதிரம்புகோப்பவரை நிரஸிப்பதிலும் எனக்கு ஒரு கஷ்டமுமில்லை. எனக்கு அஸாத்யமென்பதே கிடையாது. நானேவென்றால்:—

> மதுகைடபயோர்நிருத்தஸஞ்சாரம் உத்தஹிரண்யாக்ஷஹிரண்யவிக்ரமம் த்யாவாப்ருதிவ்யோ: । மதுமதநகதாதாம் மந்த்ரநிகமாவலீம் ஆவிர்விக்ரமைரலம் ॥

‘ஸங்கல்பம்’ என்பது இச்சை. ‘ஜகதாம் ஸமுத்யந் ஸூர்ய: ஜுஹுஷ்டஹஸ்ரம்’ ‘ஸ்வஶக்தி ஸம்ஹதம் ஶ்ரேஷ்டம் தோஷைர்வஹ விக்ரமை:’ என்ற ப்ரமாண வசநங்களை நினைக்கவேணும். ‘தயை’ என்பது ‘பிறர்துக்கத்தைத் தவிர்க்கவேணுமெனும் இச்சை’ ஸாதுக்களை பரித்ராணம் செய்வதற்கும், துஷ்க்ருத்துக்களை விநாசம் செய்வதற்கும் பகவானுடைய ஸங்கல்பமாகிய நானே போதும். பக்தர்களுக்குப் பல அவதார திவ்ய விக்ரஹங்களை ஆவிஷ்கரித்து ஸந்தோஷப்படுத்துவது முக்யமானதால் ஸங்கல்பமாத்ரத்தால் சத்ருக்களை ஸம்ஹரிக்காமல் திவ்யரூபங்களோடு அவதாரம் செய்யும் கருணை. விக்ரமை:–பகவானுடைய பராக்ரமங்களால், வயோரீது–ஸமுத்ரங்களை. மதுகைடபயோ:–மதுகைடபர்கள் ஸஞ்சாரமில்லாமல், ஸுகாஷ்டம்–செய்தேன். ஜலத்திற்குள் ஶப்தத்தை ஒளிப்பது எளிது. வேதஶப்தராசிகளை அலைக்கும் கடல்களில் ஒளித்தார்கள். த்யாவாப்ருதிவ்யோ:–என்று சேர்த்து அந்வயிக்கவேணும். ஸ்வர்க்கத்தையும் பூமியையும் (இரண்டிற்கும் அவர்கள் ஹிம்ஸகர்கள்) ஹிரண்யாக்ஷஹிரண்யர்களுடைய பீடையில்லாமல் செய்தேன். மந்த்ர:–

மறுபடியும், ராவணகும்பகர்ணாதிகளில்லாமல் செய்தேன். புந: என்பதற்கு மறுபடியும் என்று பொருள். அது எப்படிப் பொருந்துமென்றால் ஹிரண்யஹிரண்யாக்ஷர் ராவணகும்பகர்ணராக மறுபடியும் வந்து ஹிம்ஸித்தவர்கள். வ்யக்திஜாதி ஒன்றே. தேஹங்கள்மட்டும் வேறு.

அந்த அவதாரங்களெல்லாம் போகட்டும். மஹாமோஹன் அவர்கள் எல்லோரைக்காட்டிலும் ப்ரபலமான சத்ரு. அவர்கள் சிலகாலம்மட்டும் இருந்து பீடித்தவர்கள். பிறந்து சிலகாலமிருந்து மாய்ந்தார்கள். மஹாமோஹாதி சத்ருக்கள் அநாதி சத்ருக்கள்; ஓயாதசத்ருக்கள்; பிறவாத சத்ருக்கள். பிறந்தால் அழிவுண்டு. 'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:', 'ஸம்யோகா: விப்ரயோகாந்தா: மரணாந்தம் ச ஜீவிதம்' 'அத்யைவாப்தசதாந்தே வா ம்ருத்யுர்வை ப்ராணிநாம் த்ருவ:' என்கிற வசநந்யாயப்படி அதுஸரி. ஒருநாளும் பிறவாதஇந்தமாயை எப்படியழியும்? 'ஜயஜயஜஹி மாயாம்' என்று ச்ருதி கீதைதொடக்கத்தில் ப்ரார்த்தித்தபடி பிறவாத அநாதிமாயை பகவானால்தான் கொல்லப்படவேணும். 'ராமேண ஜஹி ராவணம்' என்றதுபோல 'அஜாம் ஜஹி, மாயாம் ஜஹி' என்று ப்ரார்த்திக்கவேணும். 'அத்ய' 'இன்றே'வென்றால் என்பதற்கு இக்கருத்துகளைக்கொள்ளவேணும். இக்கருத்துகள் அடுத்தச்லோகத்தாலும் தெளிவாகின்றன.

அநாதிம் ப்ரஸ்ருதாம் நித்ராம் அவதூய க்ஷணாதஹம் ।
அநந்தம் வஸ்துரோதம் ஜநயிஷ்யாமி ஜாகரம் ॥

அநாதிம் ப்ரஸ்ருதாம்-ஒருகால் (முதலில்) தொடங்கினதென்பதில்லாமல், ஆரம்பமென்பதேயில்லாத அநாதிகாலமாய்த் தொடர்ந்து ஓயாமல்வரும், ஸம்வேதநித்ராம்- ஜீவனின் அஜ்ஞானஉறக்கத்தை, 'அநாதிமாயயா ஸுப்த:' என்று ச்ருதி காட்டியது. 'யா நிசா' என்கிற கீதாச்லோகத்தில் குறிக்கப்பட்ட ராத்ரி. அஹம்-நான், க்ஷணாத்-ஒருக்ஷணத்தில், அவதூய-போக்கிவிட்டு (விதிவதூய) என்றும் பாடம்) அநந்தம் வஸ்துரோதம்-இதற்குப் பிந்தியது (முடிவு- பின்அவதி) என்பதே யில்லாத, ஜாகரம்- விழிப்பை, (தூக்கமே கலவாத சுத்த விழிப்பை) ஜநயிஷ்யாமி- பிறப்பிக்கப்போகிறேன். மாயைக்கு நேர் விரோதி இந்த ஸங்கல்பம். 'ஸக்ருத்திவாஹவதி' என்று உபநிஷத்து. அஸ்தமநமென்பதே கிடையாத பகல். நித்ய ஜ்ஞாந ப்ரகாசப் பகல்.

(கொஞ்சம் நடந்து) விஷ்ணுபக்திதேவி எங்கே? என்னைக்கொண்டு ஸகலபாபங்களையும் நீக்கி அவள் ஆசைப்படும் ஜீவமோக்ஷத்தை எதிர்பார்க்கிறவளவள். அவளை ஸந்தோஷப்படுத்துவதற்காக நான் வேலைசெய்வது. (முன்புறம் கண்செலுத்தி) இதோ இருக்கிறாள்.

நியதபுலகிதாங்கீ நிஸ்ஸரத்பாஷ்பதாரா
கலிதநிகிலஸங்கா ஸாந்த்ரஹர்ஷோத்தமீதி: ।
அத்புதரஸவிஸர்பத்ஸ்வேதவைவர்ண்யகம்பா
ப்ரமிதமநஸி தீவ்ராம் ஸந்ததிம் ஸாதிகாநாம் ॥

'சாந்தரஸத்தின் அநுபாவங்களிவை' என்று ப்ரபாவிலாஸம். அந்த ரஸத்தின் அநுபாவங்களைப்பற்றிய பரதமுநிவரின் ச்லோகங்களுமங்கே உதாஹரிக்கப்பட்டுள்ளன.

'நேத்ரஸம்வஹிஷ்ணுதம் ஆநந்தாச்ருப்லுதே ப்ரசம । ரோமாஞ்சகாஸ்ச்சார்த்தேர்க்ஷ்யா தேஹக்ஷமோத்யுக்தா விசதநஷ்ட ।। வ்யாஹவிஸ்ருதவஸ்ருஷ்டோ ஸத்ஸ்வேதஸ்வரோதா: । நாஸாக்ரோமகதகந்தே ஜ்ஞாநக்ஷேத்ராவ்ருதம்விதிஷ்டஜ்யா ।। சமஸ்தாநப்ரயோகாநுபாவாஸ்ய ச' என்று பரதமுநிச்லோகங்கள்.

நியதபுலகிதாங்கீ- ஓயாமல் திருமேனி முழுதும் மயிர்க்கூச்சல்களெடுத்துக்கொண்டே இருக்கிறது. இது தானாக செய்துகொள்ளவே முடியாது. ஒருரோமங்கூட எழும்பாது. 'மாத்ருகாவேஷ ஹர்ஷ:' என்று சுகர். 'உயிருள்ள தோலுடம்பில் ஸந்தோஷப்பூரிப்பிருக்கலாம்; உயிரில்லாத ரோமங்களில்கூட ஹர்ஷம் பரவி உயிருள்ளதுபோல எழுந்திருந்து சிலிர்க்கின்றன. கேவலம் பரவசமாய் வருகிறது. நிஸ்ஸரத்பாஷ்பதாரா-ஆநந்தக்கண்ணீர் வெள்ளமிட, கலிதநிகிலஸங்கா—மற்றெல்லாப் பற்றுகளும் நழுவி, ஸாந்த்ரஹர்ஷோத்தமீதி:— ஆநந்த பாவசத்தில் 'ஸத்வஸ்தாவேசாயநாஸ்தே' என்ற

துபோல பாடவேணுமே— ஆம், பாடுகிருள். அப்பாட்டும் 'ஹாவு ஹாவு' என்று அவ்யக்தமாய் தழதழத்து வார்த்தைத்தெளிவில்லாத ஸாமஸ்தோத்ரகானம். [illegible]— பேச்சு அமுதம்போல இனியது. தேனூரித் தித்திக்கும் நாவின்மொழி அமுதப் பெருக்கையொப்பது. [illegible]— ஆநந்தபரவசமான லாஸ்யநர்த்தநத்தோடுகூடி, (இந்த அங்கம் முதல்ச்லோகத்திலேயே இப்பெண்ணின் ஹாஸ்யலீலாவிநோதம் கூறப்பட்டது.) [illegible] பஜனைசெய்கையில் நரகபயமற்றுப்போய்விட்டது. [illegible]— பயமன்றில் ஆநந்தத்தோடு விளங்குகிருள். ப்ரஹ்மாநந்தத்தைய நுபவிப்பவள் '[illegible]' '[illegible]' என்றபடி அஞ்சுவதற்கு ப்ரஸக்தியேயில்லை. பக்தியை இப்படி வர்ணிப்பது பக்தருடைய லக்ஷணத்தை விளக்குகிறது. '[illegible]' என்றச்லோகத்தை இங்கே நினைக்கவேணும்.

மேலும்:—

[illegible]

நரகமாகிய யமலோகப்ரஸ்தாவம் வந்தது. அங்கே யமதர்மராஜருடைய உபதேசமான கடோபநிஷத்து அத்யாத்மயோகம் நினைவுக்கு வருகிறது. இந்தப்ரகரணமும் யோகஸமாதி ஸித்தித்து விஷ்ணுவின் பரமபதம் சேரும் வழி தேடுவது. '[illegible]' என்று கடவல்லீ. விஷ்ணுவின் பரமபதம் சேர விஷ்ணுபக்தி வேணும். பக்தி என்பது ப்ரீதிமயமான யோகஸமாதி. இந்த்ரியக்குதிரைகளையடக்கி மநமெனும் ரதத்திலேறி உள்யோகத்தால் விஷ்ணுபரமாத்மாவுக்குள் ஸமாதிலயம் பெறவேணும். ஸீதாதேவி ராமஸமீபத்தையடைய '[illegible]' மநமெனும் ரதத்திலேரி ராமஸிம்ஹஸமீபம் செல்லுவதுபோல ராமனையே த்யாநம் செய்துகொண்டிருந்தாள். அதையும் நினைத்து இங்கே மநதை ரதமாக ரூபணம் செய்வது. '[illegible]' என்று முதலங்கத்திலேயே சிறையிலிருந்த ஸீதைக்கு ஜீவனை ஒப்பிட்டது. இந்த்ரியங்களை அடக்கி கர்மயோகத்தை ஸங்கமில்லாமல் செய்பவன் உயர்ந்தவன். இந்த்ரியங்களை பலாத்காரமாய் ஒடுக்கி மநதினால் இந்த்ரியவிஷயங்களை நினைத்து நைந்துகொண்டிருப்பவன் மூடனென்றும், பொய்யாசரணைக்காரனென்றும் கீதை மூன்றுமத்யாயத்தில் ஸாதிக்கப்பட்டது. இந்த்ரியங்களை மநத்தினால் அடக்கி இந்த்ரியங்கள் தேஹம் இவையெல்லாம், '[illegible]' என்று முகுந்தமாலைவர்ணித்த பகவத்பக்திக்கு அநுகூலமாய் இருக்கலாம். சரீரரதத்தில் பகவத் விஷயமாக பாஹ்யவ்யாபாரங்களைச் செய்துகொண்டே எறிச்செல்லலாம். முன்ச்லோகத்தில் வாக்கு, கை, கால்; அங்கங்கள் முதலியவை பகவத்விஷமான பாடல் ஆடல்களிலீடுபட்டு பஜநம் செய்வதை வர்ணித்தது. யோகஸமாதிக்கு இந்த்ரியக்குதிரைகள் அடியோடு ஒடுங்கி அசையாமல் நிர்வ்யாபாரமாய் நின்றுவிடவேணும். '[illegible]' என்று சரீரத்திலிருந்து இந்த்ரியக்குதிரைகளை அடக்கிப் பிரித்துவிடுங்கால் சரீரரதமோடாது. அப்பொழுது மநதுதான் ரதமாகவேணும். மநோரதத்திலேரிக்கொண்டு மநதும் ஓடாமல் நிச்சலமாகி ஒரேயிடத்தில் நிற்கவேண்டிய ஸ்திதி. இதற்கு ப்ரசமம் என்னும் சமம், தமம், உபரதி முதலியது நிரம்பியிருக்கவேணும். இந்த்ரியக்குதிரைகளை நிறுத்திவிட்டு சரீரரதத்திலபிமாநத்தை விட்டு சாந்தி முதலிய அந்தரங்கமான சாலாட்படைவீரர்கள் மநதைச் சார்த்து நிற்கின்றன. இந்த மநோரதம் ஓடாமல் நின்றால்தான் பக்திஸமாதிரஸம் பெருகும்.

(தொடரும்)

ஸ்ரீ:

கண்ணிநுண்சிறுத்தாம்பு

ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுடைய ஹ்ருதயத்தில் ஸர்வவித்யாஸ்தாநங்களும் ஸர்வதா ப்ரகாசித்துக்கொண்டிருப்பதால் அங்கங்கேயிருக்கும் விஷயங்கள் ஸந்தர்பத்திற்குத் தக்கவாறு பரிஷ்கரிக்கப்பட்டு தமக்குரிய ஸ்தாநங்களில் தாமாகவே வந்துசேர்ந்து தாம்பெறுகின்றன என்பதற்கு 'ந்யாஸதிலகம்' என்கிற திருநாமகரணம் ஒரு ஒப்பற்ற உதாஹரணமென்று 'ஸேவா' பத்ரிகையின்வாயிலாக இதற்குமுன் அடியேன் விஜ்ஞாபித்திருக்கிறேன். அப்படியே ஸ்வாமியினுடைய வ்யுத்பத்தி. அதாவது— க்ராந்திகதை (மஹாமீமாம்ஸகத்வம்) அந்யாத்ருசம்; அநிதரஸாதாரணம். ஆழ்வார்களுடையவோ, பூர்வாசார்யர்களுடையவோ ஸ்ரீஸூக்திகளைக் கடாக்ஷித்து வ்யாக்யாநம் ஸாதிக்கவேண்டிய அவஸரங்களில் இதரர்கள் அந்த ஸ்ரீஸூக்தியை அநுபவித்து வ்யாக்யாநிப்பதற்கும் மஹாமீமாம்ஸகரான நம்ஸ்வாமிதேசிகன் அநுபவித்து அதிலுள்ள வக்த்ருஹ்ருதயகதமான யதாவஸ்திதமான வர்த்தங்களை ப்ரகரண ப்ரமாண யுக்த்யாதிகளைக்கொண்டு வ்யாக்யாநிப்பதற்கும் வெகுவாசியுண்டு என்பதை ஸ்ரீ கீதாபாஷ்ய தாத்பர்யசந்த்ரிகை, தத்வடீகை, ஸ்தோத்ர பாஷ்யம் முதலிய பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி வ்யாக்யாநங்களிலும், த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி, முநிவாஹநபோகம் முதலிய ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திவ்யாக்யாநங்களிலும் காணலாம். இதற்கொரு உதாஹரணத்தை இப்பொழுது விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

ஸ்வாமிஸாதித்த 'மதுரகவிஹ்ருதயம்' என்கிற ரஹஸ்யம் நம்முடைய துரத்ருஷ்டத்தாலே லுப்தமாய்விட்டது. அதில் மதுரகவிகளைக் குறித்தும், அவர் க்ரந்தத்தைக் குறித்தும் எவ்வளவு விசேஷார்த்தங்கள் ஸாதிக்கப்பட்டிருந்தனவோ! இதை நினைக்கும்போது மனம் மிகவும் க்லேசப்படுகின்றது. ஆயினும், அம்மதுரகவியினுடைய ப்ரபந்தத்தை வ்யாக்யாநிக்கும் ரீதியில் குருபரம்பராஸாரத்திலுள்ள—

'இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும்பேற்றில்
இகழாதபல்லுறவில் இராகம்மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கில் தகவோக்கத்தில்
தத்துவத்தையுணர்த்துதலில் தன்மையாக்கில்
அன்பர்க்கேயவதரிக்குமாயன்நிற்க
அருமறைகள்தமிழ்செய்தான் தாளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும்
தொல்வழியேநல்வழிகள் துணிவார்கட்கே'

என்கிற ஒரு பாசுரம் மதுரகவிஹ்ருதயம் என்னும் க்ரந்தம் லுப்தமான சோகத்தை ஒருவாறு போக்கடிகிறது. இப்பாசுரத்தை நன்றாய் ஊன்றி ஸேவித்தால் மதுரகவிகளுடைய ஸர்வஜ்ஞத்வமும் அவருக்குள்ள க்ரந்தரசநாஸாமர்த்யமும், சிறிய கண்ணாடி பெரிய உருவத்தைக் காட்டுமாப்போலே அவர் தம் பத்துப்பாட்டில் வெளியிட்டிருக்கும் அத்யாச்சர்யமான ரஹஸ்யார்த்தங்களும் நன்கு புலப்படும். நம் ஸ்வாமிதேசிகன் தவிர மற்றொருவர் புத்தியில் அம்மதுரகவிஹ்ருதயம் தோன்றாது. இனி இப்பாசுரமுகத்தாலேயே ஸ்வாமியினுடைய க்ராந்திகத்வத்தையும் வ்யாக்யா நைபுணியையும் அநுபவிப்போம்.

'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்கிற ப்ரபந்தம் முண்டகோபநிஷத்துக்கு உபப்ருஂஹண ரூபமாய் ஏற்பட்டது. மற்ற உபநிஷத்துக்கள்போலன்றிக்கே இவ்வுபநிஷத்து குருபரம்பரையை உபக்ரமத்தில் அநுஸந்தித்து சரியாய் நடுபாகத்தில் ப்ரஹ்மவித்துக்களுடைய ப்ரபாவத்தை விசேஷமாகக்கொண்டாடி கடைசியில் மறுபடி குருபரம்பரையை அநுஸந்தித்து 'நம: பரமர்ஷிப்ய:' என்று பாகவதஸ்மரணம்பண்ணித் தலைக்கட்டுகிறது. ஆகவே உபக்ரமோபஸம்ஹாரம், அப்யாஸம் முதலான தாத்பர்யலிங்கங்களால் இவ்வுபநிஷத்து, ஆசார்யன் பாகவதன் இவர்கள் ப்ரபாவத்தையே பேசவந்ததென்று நிஷ்கர்ஷிக்கலாம். இவ்வுபநிஷத்தின் நடுவில், 'யம் யம் லோகம் மனஸா ஸம்விபாதி விசுத்தஸ[illegible] —

மாந் । தம் தம் லோகம் ஜயதே தாம்ஶ்ச காமாந் தஸ்மாதாத்மஜ்ஞம் ஹ்யர்சயேத் பூதிகாம: ॥ ஸ வேதைதத் பரமம் ப்ரஹ்ம தாம யத்ர விஶ்வம் நிஹிதம் பாதி ஶுப்ரம் । உபாஸதே புருஷம் யே ஹ்யகாமாஸ் தே ஶுக்ரமேததிவர்தந்தி தீரா: ॥' என்று இரண்டு மந்த்ரங்கள் உள்ளன. இதில் முதல்மந்த்ரத்தால் ப்ரஹ்மவித்தை ஆராதிப்பவனுக்கு த்ரைவர்க்கிகபுருஷார்த்தங்கள் ஸித்திக்கின்றன என்றுசொல்லி, இரண்டாவதால் அவனுடைய உபாஸநத்தால் ஸாக்ஷாந்மோக்ஷமே கிடைக்குமென்று சொல்லுகிறது. இங்கு இரண்டாம் மந்த்ரத்திற்கு 'ஶ்ருதிர்ஜாயா: மோக்ஷஸம்ஶயக்நமாஹ—' என்று அவதாரிகை பாஷ்யத்தில் இடப்பட்டிருக்கிறது. ஆகவே இவ்வுபநிஷத்திலுள்ள வாக்யங்களைக் கடாக்ஷித்தே கண்ணிநுண்சிறுத்தாம்பு அவதரித்திருக்கவேண்டும். மேலுள்ள மந்த்ரத்திலுள்ள 'தீரா:' என்கிற பதத்தையும் 'தே ஶுக்ரமேததிவர்தந்தி' என்கிறவாக்யத்தையும் திருவுள்ளம்பற்றியே பதினோராவதுபாசுரத்தில் 'நம்புவார் பதி வைகுந்தம்காண்மினே' என்று மதுரகவிகள் ஸாதித்தது. ஆக இதையெல்லாவற்றையும் திருவுள்ளம்பற்றியே ஸ்வாமிதேசிகன் தம் பாசுரத்தில் 'தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே' என்று ஸாதித்தது. உபநிஷந்மூலமாக வந்தபடியால் மதுரகவிகள் காட்டியவழி தொல்வழி என்பதில் ஆக்ஷேபமில்லை. அங்குள்ள 'தீரா:' என்கிற பதத்தை ஜ்ஞாபகப்படுத்தவே 'துணிவார்கட்கே' என்று ஸாதித்தது என்பதிலும் யார்க்கும் ஸம்ஶயமேற்பட ந்யாயமில்லை. நம்மைப்போல ஒரு மநுஷ்யனை ஆசார்யனுடைய உபாஸநத்தால் மோக்ஷம் வரும் என்று நம்பிக்கை ஏற்படுவது கஷ்டமன்றோ. ஆகையால் விச்வாஸம் வருவது கஷ்டம் என்பதைக் கடாக்ஷித்து 'தீரா:' என்றது உபநிஷத்து. 'ஶுக்ரமேததிவர்தந்தி' என்பதின் விவரணமே 'பதி வைகுந்தம்' என்பது. ஆக இவ்வளவால் இப்ப்ரபந்தம் முண்டகோபநிஷத்தின் உபப்ரும்ஹணமாக ஏற்பட்டதென்பதை ஸ்வாமிதேசிகன் திருவுள்ளம்பற்றியிருக்கிறார் என்பது நிரூபிதமாயிற்று. இவ்விஷயத்தை ஸ்ரீ. உப. உத்தமூர்ஸ்வாமி தன் ஆசார்ய திவ்யசரிதத்தில் ஸங்க்ரஹேண ஸாதித்திருக்கிறார். இப்போது அடியேன் இதைமாத்திரம் விஜ்ஞாபிக்க வரவில்லை. கவிதா இப்பிரபந்தத்தில் அடங்கியிருக்கும் ஒரு ஆச்சர்யமான வைகரி ஸ்வாமிதேசிகன் திருவுள்ளத்தில்பட்டிருக்கிறது என்பதைத்தான் விஜ்ஞாபிக்க வந்தேன். எந்த க்ரந்தத்தின் பூர்ண தாத்பர்யமும் க்ரந்தத்திலுள்ள ஸர்வவாக்யங்களின் ஸங்கதியும் பூர்ணமாய் க்ருஹீதமானால்தான்க்ருஹீதமானதாகஆகும் க்ராந்திகர்கள் அஸங்கதமாய் ஒருபேச்சும் பேசமாட்டார்கள். அநுபவபரீவாஹரூபமான க்ரந்தமானாலும் அதிமேதாவிகளான மஹான்களின் வாக்யத்திலிருந்து வந்திருப்பதால் ஸா ஸங்கதமாகவே இருக்குமேயொழிய ஈஷதம்ஶத்திலும் அஸங்கதமாக இருக்கமாட்டாது. ஆகவே இப்ப்ரபந்தத்திலுள்ள ஸங்கதியைப் பராமர்சிக்குங்கால் மயிர்சிலிர்க்கும்; ஆநந்தபாஷ்பம் தானாகவே பெருகும். இப்படிப்பட்ட விசித்ரஸந்நிவேசம் இப்ப்ரபந்தத்தில் உள்ளதென்பதை ஸ்வாமிதேசிகன் ஸூசிப்பிக்காவிட்டால் நம்மால் எப்படி அறியமுடியும்? ததா ஹி—இப்ப்ரபந்தமானது ஸாக்ஷாத் ஸர்வேச்வரனுக்கும் ஜீவனுக்குமுள்ள பத்துவித ஸம்பந்தத்தைத் தனக்கு (மதுரகவிக்கும்) தன் ஆசார்யனான நம்மாழ்வாருக்கும் (ஸர்வேச்வரனிடமுள்ள குணங்களை நம்மாழ்வாரிடமுள்ளனவாகவநுஸந்தித்து) உள்ளதாயநுஸந்தித்துத் தான் நம்மாழ்வாரை ஆச்ரயித்தாலே மோக்ஷம் தனக்கு ஸித்தமாய்க் கிடைக்குமாதலால் பரமபுருஷன் உள்பட மற்றொரு தேவதையைத் தான் அடையவேண்டியது அநாவச்யகமென்று ப்ரதிபாதிக்கிறது.

இங்கு இப்ப்ரபந்தத்தில் முதல் ஐந்துபாட்டுகள் ஒருபேடிகையாகவும் இரண்டாவதுஐந்து பாட்டுகள் ஒரு பேடிகையாகவும் பிரிகின்றன. முதல்பேடிகையில் ஜீவநிஷ்டதர்மங்களும், இரண்டாவது பேடிகையில் பரமபுருஷநிஷ்டமான தர்மங்களும் சொல்லப்படுகின்றன. இன்பத்தில், இறைஞ்சுதலில், இசையும்பேற்றில், இகழாத பல்லுறவில், இராகம் மாற்றில் என்னும் ஐந்து பதங்களால் சொல்லப்பட்ட ஐந்து

வ்யாபாரங்களும் ஜீவநிஷ்டங்கள். (சிஷ்யநிஷ்டம்) (இதில் இகழாத பல்லுறவு என்பது உபயநிஷ்டமானாலும் உறவால் வரும் பயனை ஜீவனே முக்யமாய் அடைவதால் அவனுக்கு ப்ராதாந்யம்.) தன்பற்றின், வினைவிலக்கில், தகவோக்கத்தில், தத்துவத்தை யுணர்த்துதலில், தன்மையாக்கில் என்கிற ஐந்து பதங்களால் சொல்லப்பட்ட தர்மங்கள் பரமாத்மநிஷ்டங்கள். (ஆசார்யநிஷ்டம்) இப்படி இரண்டு பேடிகை யுள்ளதென்பதை ஸ்வாமிதேசிகன் இப்பாசுரத்தில் முதலைந்துபதங்களை ஜீவநிஷ்டதர்மபோதகங்களாயும், இரண்டாவது ஐந்துபதங்களை பரமாத்மநிஷ்ட தர்மபோதகங்களாகவும் ப்ரயோகித்ததிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். ஸ்வாமிதேசிகனும் மூலகர்த்தாவுக்கு அவிவக்ஷிதமான அர்த்தத்தை ஸாதிக்கவில்லை. ஸ்வாமி வ்யாக்யாநித்தபிறகு மூலத்தையே உற்றுப்பார்க்குங்கால் இது நன்கு புலப்படும். மதுரகவிகள் முதலைந்து பாசுரங்களில் இன்பம் எய்தினேன், (முதல்பாட்டில் அர்த்தாநுவாதம்) ‘பாடித்திரிவனே’ ‘அடியேன்பெற்ற நன்மையே’ ‘சடகோபன் என்நம்பியே’ ‘சதிர்த்தேனின்றே’ என்று தம்மிடத்திலுள்ள (ஜீவாத்மாவினிடத்திலுள்ள) தர்மங்களைப் பேசி மேல் ஐந்துபாசுரங்களில் ‘இகழ்விலன்’ ‘பாற்றியருளினான்’ ‘இன்தமிழ்பாடினான்’ ‘என் நெஞ்சுள் நிறுத்தினான்’ ‘திருத்திப்பணிகொள்வான்’ என்கிற பதங்களினால் பரமபுருஷநிஷ்டமான (ஆசார்யரான நம்மாழ்வார் நிஷ்டமான) தர்மங்களைப் பேசியிருக்கிறார். ஆக இப்படி இரண்டு பேடிகைகளாகப் பிரிந்ததிக்ரந்தம். அதிலும் யதாஸங்க்யமாய் அந்வயம் விவக்ஷிதம். அதாவது முதலாவதான இன்பத்தில் என்னும் பதத்தால் சொல்லப்பட்ட ஜீவநிஷ்டதர்மத்தால் பரமாத்மதர்மபோதக பதங்களில் முதலாவதான (6-வது) தன்பற்றில் என்பதால் சொல்லப்பட்ட பகவத்வ்யாபாரம் ஸித்திக்கின்றது. இப்படியே இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து ஜீவநிஷ்டதர்மங்களால் அடைவே ஏழு, எட்டு, ஒன்பது, பத்தான பரமாத்மநிஷ்டதர்மங்கள் ஸித்திக்கின்றன. தயாவ பூர்வோத்தரபேடிகைகள் அடைவே காரணகார்யபாவாபந்நங்கள் என்று ஏற்படுகின்றது. இதை ஸங்க்ரஹமாய் உபபாதநம் செய்கிறேன். ஜீவனுக்கு முதலில் பரமாத்மாவிடத்தில் இன்பம் உண்டானால் அவன் இவனுக்குத் தன்னிடத்தில் பற்றுதல் உண்டாகும்படி செய்கிறான். ‘ஏஷ ஹ்யேவாநந்தயாதி’ என்கிற ச்ருதியும் அதன் விவரணமான ‘ப்ரியதம ஏவ ஹி வரணீயோ பவதி’ இத்யாதியான நம் பாஷ்யகார ஸ்ரீஸூக்தியும் இங்கு அநுஸந்திக்க ப்ராப்தம். அடுத்தது இறைஞ்சுதல். தனக்குக் கர்மபந்தத்தால் வந்த ஆபத்தைப் போக்கும்படி பரமபுருஷனிடம் ப்ரார்த்தித்தல். அதனாலவன் இவன் வினைகளை விலக்குகிறான். அடுத்து இசையும்பேறு. இது ஜீவன் பரமபுருஷனை உத்தமபுருஷார்த்தமாகவும், தனக்குக் கிடைக்கவேண்டியதாகவும் இசைந்தால் அவனுக்கு க்ருபோதய: (தகவோக்கம்) ஏற்படுகிறது. அடுத்தது இகழாத பல்லுறவு. ஜீவனுக்குப் பரமபுருஷன் அன்னையாயுமத்தனுயுமாவதால், புத்ரனுக்கு மாதாபித்ருக்களைவிட ஹிதசிந்தகர்கள் கிடையாதானபடியால் ‘மாதா பித்ரு ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம் ஶாஸ்த்ரம்’ என்று சொன்னபடி திருவாய்மொழி முதலியப்ரபந்தமுகேந தத்வத்தை உணர்த்துகிறானவன். அடுத்தது இராகம்மாற்றல். ஜீவனுக்கு ப்ராப்யாந்தரவைத்ருஷ்ண்யம் பூர்த்தியாகஏற்பட்டால் தன்மையாக்கில் என்று சொல்லப்பட்ட பகவத்ஸாரூப்யம் பூர்த்தியாக ஏற்படும். வித்வான்கள் இந்த ஸங்க்ரஹமான உபபாதநத்தாலேயே இதிலுள்ள பூர்ணரஸத்தையும் அநுபவிக்கக்கூடுமானதால் விஸ்தரபியா அதிகம் உபபாதிக்கவில்லை.

இப்படியே ‘இன்பத்தில் இத்யாதியால்’ சொல்லப்பட்ட தர்மங்களுடைய பௌர்வாபர்யத்திலும் நியாமகம் உண்டு. முதலில்ஜீவன் தனக்கு பரமாத்மா இன்பமயனாகத் தோன்றி, பகவதபிமுகனாக ஆகி அவனையநுபவிக்கவிரோதியான கர்மங்களைப்போக்க அவனை ஶரணாகதி பண்ணி அவனையேபரமபுருஷார்த்தமாகஅடையவிசைந்து அப்பேறு த்னக்கு தாயதநம் போல் கிடைக்கவேண்டியதற்குரிய ஸம்பந்தம் தனக்கும் அவனுக்கும் உண்டெண்பதை அநுஸந்தித்து அவனை அவிச்சிந்நமாய் அநுபவிப்பதற்கு விரோதியான ப்ராப்யாந்தரத்ருஷ்ணையை அறவே ஒழித்துநின்றானேயானால் பரம

புருஷன் இவனுக்குத் தன்னிடத்தில் பற்றுதலையுண்டாக்கி இவன் ப்ரார்த்தித்தபடி வினைகளைவிலக்க ஸங்கல்ப்பித்து தந்மூலமாய் ஏற்பட்ட க்ருபாதிக்யத்தால் யதாவஸ்திதமான தத்வத்தையுணர்த்தி கடைசியில் ஸ்வஸாயுஜ்யத்தையளிக்கிறான் என்று.

இனி இக் கண்ணிநுண்சிறுத்தாம்பில் ஒவ்வொரு பாட்டிற்கும் விவரணரூபமாய் அங்கங்கே சிதறிக்கிடக்கும் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திகளை எடுத்துக்காட்டுவதானால் மிகவும்விஸ்தாரம் ஏற்பட்டுவிடும். ஆதலால் முதல்பாசுரத்தில் முதலடிக்குமட்டும் விவரணமாயமைந்த ஒரு ஸ்ரீஸூக்தியைமாத்திரம் விஜ்ஞாபித்து நிறுத்திக்கொள்ளுகிறேன். ‘கண்ணிநுண்கிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்’ ‘க்ஷீணே தைவே நிஜப்ருத்யநாயகம் தாமபிர்யோ ஸம்ஹிதைர்வ்யபத்நாத் । நிர்வீக்ஷ்ய நிர்விண்ணயயோ ஜநந்யா: ஸஹோக்ஷவஸக்த்யா ஸவ – ஹத்வ பாந்த்ய: ॥’ என்கிற யாதவாப்யுதய ஸ்ரீஸூக்தி விவரணம். தாம்பு என்பதே ‘தாம’ என்று கூறப்பட்டது. அத்தாம்பில் கண்ணிகள் ஏற்பட்டதற்குக் காரணமும் கட்டுண்ணப்பண்ணிய என்கிறபதத்தில் விவக்ஷிதமான பாவமும் இதுபோல் இன்னும் அனேக ஸ்வாஸார்த்தங்களும் இச்ச்லோகத்தி லடங்கியுள்ளன என்பது ஸஹ்ருதயவித்வான்களுக்கு நன்கு புலப்படும்.

ஸ்ரீ:

ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம்

லோகத்தில் எல்லோரும் தாங்கள் பிறந்த தினத்தை ஜ்ஞாபகமாகவைத்திருந்து அன்று பகவத் பாகவத ஆராதநங்களைச்செய்வது ஒரு புறமிருந்தாலும் இதர கேளிக்கைகளை நிறைய நடத்தி ஆநந்திப்பது வழக்கமாக இருந்து வருகிறது. கௌஸ்துபஸ்தாநீயனுயிருக்கும் ஜீவாத்மா ஓர் தேஹத்துடன் ஸம்பந்தப்பட்டு வெளித்தோன்றி அதனுல் அநேக கர்மங்களை அநுபவிக்கநேர்ந்த நாளை இவ்வாறுகொண்டாடுகிறார்கள் லோகத்தில். கர்மபந்தவிநிர்முக்தனாய் பரமபதத்தில் நித்யஸூரிகளோடொக்கத் தாங்களும் பரமபலத்தை அடைந்து அநுபவிக்கயோக்யமாய் பண்ணுகிற யாதொரு நாளுண்டோ (பரஸமர்ப்பணம் செய்துகொள்ளும் திநம்) அதைப்பற்றி ஒருவரும் ஸ்மரிப்பதே கிடையாது. மேலும் இப்படிப்பட்ட பலத்தை அடைவதற்கு உபகாரகராயுள்ள ஆசார்யாளின் திருநக்ஷத்திரங்களைப்பற்றி கவனிப்பவர்களே அடியோடு கிடையாதென்றே சொல்லலாம். இன்னும் சிலர் தங்கள் ஸாக்ஷாத் ஆசார்யனின் திருநக்ஷத்ரமோ அல்லது ஆசார்யபரம்பரையிலுள்ள மஹான்களின் திருநக்ஷத்ரமோ தெரியாதுகூட இருப்பார்கள்.

ஸ்ரீ தில்லைஸ்தாநம்ஸ்வாமி ஒருதரம் ஒருவரை ‘உமக்கு எங்கேஅந்வயம்? என்று கேட்க அந்தஸ்வாமி கபடமறியாதவராகையால் ‘எனக்குத் தெரியாது, யாரோ ஒருஸ்வாமி அறையில் சிகப்புத்துணி உடுத்துக்கொண்டிருந்தார்; அவரிடம்தான் எனக்கு அந்வயம்’ என்று தான் அறிந்தபடி சொன்னார்.

ஓர் ஆசார்யன் ஒரு சிஷ்யனுக்கு பஞ்சஸம்ஸ்காரம் பண்ணினவுடன் மந்த்ரோபதேசத்திற்காக அருகேவரக் கூப்பிடும்போது சிஷ்யன் ‘எனக்கு காது கேட்கும் அங்கிருந்து சொல்லலாம்’ என்று பதில்சொல்லுமளவில் ஆசார்யனானவன் ‘அப்பா, இது அஷ்டகர்ணமாக உபதேசிக்க வேண்டும். ஆகையால் கிட்டேவா’ என்று நல்வார்த்தையாகச் சொல்லி அழைக்க, சிஷ்யன் கிட்டே வந்ததும் அவன் வலதுகாதில் மிகவும் சிறியதான திருமந்த்ரத்தை உபதேசிக்க, உடனே சிஷ்யன் ‘அப்பாடா! இதற்குத்தானா இவ்வளவு ஆடம்பரம்! ‘ரஹஸ்யம், கிட்டே வா’ என்றெல்லாம். இது முன்னமேயே எனக்கு நன்றாகத்தெரியுமே. சென்னையில் கன்னையா நாடகக்கம்பெனியில் பெரிய எழுத்துக்களில் போட்டிருக்கிறதே அதுதானே இது!” என்றானாம். இந்த வருத்

தாந்தத்தை ஸ்ரீ திருக்கோட்டியூர்ஸ்வாமி பணித்தபடி.

இப்படிப்பட்ட ஶோசநீயமான நிலைக்கு நம்முடைய ஸம்ப்ரதாயமும் மிகவுமுயர்ந்த ரத்நங்களுக்கு ஸத்ருசமான மந்த்ரங்களும் தக்காலம் வந்திருக்கின்றன. ஆகையால் முதலாவதாக நம் ஆசார்யபரம்பரையில் உள்ளவர்கள் யார்? அவர்கள் எந்தெந்த மாதங்களில் எந்த திருநக்ஷத்ரங்களில் அவதரித்தார்கள்? அவர்களைப்பற்றிய வ்ருத்தாந்தம் யாது? அவர்கள் நமக்குச் செய்துள்ள மஹோபகாரங்கள் யாவை? என்றிப்புடைகளிலுள்ள சில விஷயங்களை நாம் அவச்யமாகத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. இவைகளைப்பற்றி எழுதுவதே இந்த வ்யாஸத்தின் முக்ய நோக்கமாகும். அவ்வாசார்யவள்ளல்களின் திருநக்ஷத்ரதினங்களைத் தெரிந்துகொண்டு அந்த தினங்களில் தாங்கள் பாஹ்யமாக ஒருவித ஆடம்பரமும் செய்ய இயலாதவர்களாயிருப்பினும் மனத்திலாவது அன்று அந்த ஆசார்யோத்தமர்கள் செய்துள்ள மஹோபகாரங்களை நினைத்து நைந்து உள்கரைந்துருகி அதன்பரீவாஹமாக வாயினால் அவர்களைத்துதித்து 'அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ ஶரணம் மதீயம்' என்றிருந்தால் போதுமானது.

முதலாவதாக 'சைத்ர: ஸ்ரீமாந் அயம் மாஸ:' என்கிறபடி மாதங்களுக்கெல்லாம் சிரோபூஷணமாயுள்ள சித்திரை மாதத்தில் திருவவதரித்த மஹான்களில் ப்ரதாநமாயுள்ளவர்களைப்பற்றி தெரிந்துகொள்வோமாக.

ஸர்வலோகஹிதமான அத்யாத்மசாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதமப்ரவர்த்தகன் ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரன். 'இவனொருவனுமே தனக்கோராசார்யனில்லாத பரமாசார்யன்' என்று ஸ்ரீமத் ஸம்ப்ரதாயபரிசுத்தி ஸ்ரீஸூக்தி. இவன் திருவவதரித்த திருநக்ஷத்ரம் பொதுவாக ச்ரவணம். இவன் முதன்முதலாவதாக இந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்திக்கத்தோடுமல்லாமல் இதை மேன்மேலும் வ்ருத்தி செய்வதற்காக ஆங்காங்கு அர்ச்சாரூபியாக ஸேவைஸாதித்துக்கொண்டிருக்கிறான். இப்படி அர்ச்சையில் ப்ரதாநமாயுள்ள கோயில், பெருமாள்கோயில் இவ்விரண்டிடங்களிலும் கோயில்கொண்டிருக்கும் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனாரென்ன அத்திகிரியருளாளனென்ன இவர்களிருவரும் இம்மாதத்தில் முறையே ரேவதியிலும் ஹஸ்தநக்ஷத்ரத்திலும் திருவவதரித்தார்கள். அரங்கன் தன் திருவடிவாரத்தில் ஆழ்வாராசார்யர்களை நிறுத்தி ஸம்ப்ரதாயத்தை அபிவ்ருத்தி பண்ணிப்போருகிற ப்ரகாரம் ப்ரஸித்தமிறே. கரிசைலக்ருஷ்ணமேகமானது பெரியநம்பிகள்மூலமாக வர்ஷித்து ஸ்ரீபாஷ்யகாரராகிய மடுவை நிரப்பி அம்மடுவிலிருந்து தேசிகாதிகளான ஆசார்யர்களாகிற வாய்க்கால்வழியாக ஸம்ப்ரதாயத்தை பலவிடங்களில் பரவும்படி செய்தருளுகிறது. இப்படி ப்ரதமாசார்யன் நமக்கு மஹோபகாரம் பண்ணிப்போருகிறான்.

மேலும் இம்மாதத்தில் அவதரித்த மஹான் மதுரகவிகள். இவர் இம்மாதத்தில் சித்திரை நக்ஷத்ரத்தில் திருவவதரித்தார். இவர் அவதரித்த இடம் திருக்கோளூர் என்பது. இவர் உபதேசபரம்பரையால் நாதமுநிகளுக்கு ஆசார்யரானார். இவர் அவதரித்தகாலத்தில் ஸாக்ஷாத் ஸர்வேச்வரன் கண்ணனாக அவதரித்திருந்தபோதிலும் அவனை நேரில் பற்றாமல் அருமறைகள் தமிழ்செய்தான் தாளே கொண்டு அநவரதம் அந்தரங்க அடிமைபூண்டார். எம்பெருமானிடத்தில் நாம் அடைய விரும்புமவையெல்லாம் ஆசார்யனிடத்திலேயே அடையலாமென்கிற பரமசாஸ்த்ரார்த்தத்தை அநுஷ்டித்துக்காட்டிய மஹான் இவர். இத்தைக் கணிசித்தே 'இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும்பேற்றில் இசழாத பல்லுறவில் இராகம்மாற்றில் தன்பற்றில் வினைவிலக்கில் தகவோக்கத்தில் தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில் அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன்நிற்க அருமறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும் தோல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே' என்று தூப்புல்வள்ளல் அருளியபடி. இவர் ஆழ்வார்விஷயமாக 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்கிற பத்துப்பாசுரங்களை அருளிச்செய்து மாறனையல்லால் என்றும் மறந்தும் புறந்தொழாதவராயிருந்தார். கரியகோ

லத்திருவுருக்காண்பதும் ஆழ்வார் திருவுள்ள
முகக்கைக்காகவேதான். இப்படி ஆழ்வார்விஷ
யத்தில் தம் வாக்கை இவர் உபயோகப்படு
த்தியபடியால்தான் இவருக்கு மதுரகவிகள்
என்று திருநாமமாயிற்று. இவர் நமக்கு க்ரந்
தமுகத்தாலும் உபதேசமுகத்தாலும் ஆசார்ய
ரானார். இவர் அநுஷ்டித்துக்காட்டிய அர்த்
தம் பகவத்ஸமாச்ரயணத்தைக்காட்டிலும் ஆ
சார்யஸமாச்யணமே உயர்ந்தது என்பது
தான்.

மேலும் இம்மாதத்தில் ஸ்ரீமந்நாதமுநிக
ளின் ப்ரதமசிஷ்யராயும் நம் ஆசார்யபரம்ப
ரையில் சேர்ந்தவராயுமுள்ள ஸ்ரீஉய்யக்கொண்
டார் என்னும் மஹான் க்ருத்திகா நக்ஷத்ரத்
தில் அவதரித்தார். இவர் யோகாப்யாஸத்தில்
நிலையுள்ளவர். இவருக்கு ஆசார்யரான
ஸ்ரீமந்நாதமுநிகள் தம்பௌத்ரரான ஆளவந்
தாரைத் திருத்திப்பணிகொள்ள இவரை நிய
மித்தார். ஆனால் உய்யக்கொண்டாருக்கு அந்
திமகாலம் ஸமீபித்தபடியால் தம் சிஷ்யரான
மணக்கால்நம்பியை ஆளவந்தாருக்கு உபதேசிக்
கும்படி நியமித்து தாம் பரமபதத்தையடைந்
தார். இவர்மூலமாகத்தான் ‘நாயொவஜூம்
ஹூவரு தம்’ என்கிற ஸம்ப்ரதாயமானது மணக்
கால்நம்பிவழியாக நமக்கு வருகிறது.

மாதங்களில் எல்லாவற்றிலும் சித்திரைமா
தம் சிறந்துவிளங்குவதற்கோர் முக்யகாரணமு
ண்டு. எந்த ஆசார்யனின் திருமுடிஸம்பந்தம்
பெற்றுசிலரும், திருவடிஸம்பந்தம்பெற்று சில
ரும் பாக்யசாலிகளாக ஆனார்களோ அப்படிப்
பட்ட ஆசார்யோத்தமன் தேசமெல்லாம் உக
ந்திடப் பெரும்பூதூரில் இம்மாதத்திலன்றோ
திருவாதிரையில் திருவவதரித்தது! இப்ப
டிப்பட்ட மஹிமையுடைய இராமாநுசன்
முதலாவதாக யாதவப்ரகாசனிடத்தில் ஆச்ர
யித்து அவன்சொல்லும் உபநிஷதர்த்தம் தம்
திருவுள்ளத்திற்குப் பொருந்தாமையால்
அவை தப்பென்று சொல்லப்புக அதுகேட்டு
அவன் சீறி இவரை மரணத்திற்குள்ளாக்கவே
ண்டுமென்றெண்ணி அதற்கானஉபாயங்களைத்
தேட, கடைசியில் பெருந்தேவிமணாளன் இவ
ரை ஆட்கொண்டு இவரால் கொடுக்கப்பட்ட
தீர்த்தத்தைப் பருகி ஆநந்தபரவசனாகி திருக்
கச்சிநம்பிகள்மூலமாகப்பெரியநம்பிகள்பக்கலில்
இவரைச் சேர்ப்பித்து ஸத்ஸம்ப்ரதாயத்தை
க்ரஹிக்கும்படிச் செய்தான். பிறகு இவர்
திருவடிகளில் லோகமடங்கலும் ஆச்ரயித்து
ஒரே வைஷ்ணவமயமாகியது. இதைக் கணி
சித்தே ஆழ்வார் ‘பொலிக பொலிக போயி
ற்று வல்லுயிர்ச்சாபம்........கடல்வண்ணன்
பூதங்கள் மண்மேல் மலியப்புகுந்து இசை
பாடி’ என்று அருளினார் என்பது ஸுப்ரஸி
த்தமிறே. இப்படி லோகமெல்லாம் ஒரே
வைஷ்ணவமயமாக ஆக்கின ஓர் பெருமையைக்
கண்டு தம் ஆசார்யனால் எம்பெருமானார்
என்று பெயர்பெற்றவராயும், சங்கராதிகளின்
கர்வத்தைப் போக்கினபடியாலும், இளையபெ
ருமாள் பெருமாளுக்குப்பிராட்டியும் சேர்ந்த
சேர்த்தியில் ஸர்வவித கைங்கர்யங்களை
யும் செய்தாப்போல் இவரும் பெரியபெருமா
ளும் பிராட்டியும் வீற்றிருக்கும் சேர்த்தியில்
கத்யத்ரயத்தை அநுஸந்தானம் செய்து அவர்
கள்திருவடிகளில் அசேஷ கைங்கர்யங்களையும்
செய்யவொருப்பட்டதினால்இராமாநுசன் என்று
பெயர்பெற்றவராயும் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு
பாஷ்யம்செய்தபடியினால் (வேறு அநேகம்பேர்
கள் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யம்பண்ணியி
ருந்தபோதிலும் அவர்களுக்கு பாஷ்யகாரர்
என்று பெயர்வராமல் இவரே) ஸ்ரீபாஷ்யகாரர்
என்று அஸாதாரணமாகப் பெயர்பெற்றவரா
யும், யதிகளுக்கெல்லாம் ச்ரேஷ்டராய் விளங்
கினபடியால் யதீச்வரர் என்று பெயர்பெற்ற
வராயும், உடையவன் உடைமையை ரக்ஷிக்க
ப்ராப்தமானாப்போல், தன்னை அண்டினவர்
களைத் தான் ‘நிகரின்றி நின்றவென் நீசதை
க்கு நின்னருளின்கண் அன்றிப்புகலொன்று
மில்லை யருட்குமஃதேபுகல்’ என்று அமுதனார்
அருளியபடி கேவலம் க்ருபையினால் ஆட்கொ
ண்டு க்ருபைசெய்கிறபடியால் உடையவர் என்
று பெயர்பெற்றவராயும் இவர் விளங்கினார்.
இப்படி அநேககாரணங்களினால் இராமாநுஜ
னுக்கு அநேக திருநாமங்களிருந்தபோதிலும்
ப்ரதானமாகக் கீழ்க்கூறிய ஐந்து நாமங்களை
நோக்குங்கால் ‘அடையார்கமலத்தலர்மகள்
கேள்வன் கையாழி .... இடையே இரா
மாநுசமுனியாயின விந்நிலத்தே’ என்று அமு
தனார் அருளியபடிக்கும், ‘ஹ்யயடீஷி3தெஷ

தீக்ஷ்ணாவம்.........வஜ்ஜுவிராயமையெஉடும்ராலெ:' என்று ஸ்ரீ ஸ்வாமிதேசிகன் அருளியபடிக்கும் எம்பெருமானின் பஞ்சாயுதங்கள் இந்த பூதலத்தை ரக்ஷிக்கவேணுமென்று இந்நிலத்தில் ஐந்து நாமாக்களை ப்ரதானமாகக்கொண்ட ஸ்ரீபாஷ்யகாரராயின என்று சொல்லத் தட்டில்லை.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள் ஒன்பது. அவையாவன— ஸ்ரீபாஷ்யம், தீபம், ஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், ஸ்ரீ கீதா பாஷ்யம், கத்யத்ரயம், (சிறியகத்யம், சரணாகதிகத்யம், வைகுண்டகத்யம்) நித்யம். இதில் முதல் மூன்றுக்ரந்தங்களால் இதரமதங்களை நிராகரித்துத் தம்மதத்தை ஸ்தாபித்து ஸ்ரிய:பதியான நாராயணன்தான் பரதேவதை, அவனை அடைவதற்கு பக்தியோகந்தான் உபாயம்; அவ்வுபாயத்தை அநுஷ்டித்தவன் ப்ராரப்தாவஸாநத்தில் பரமபதம் சென்று ஸ்ரிய:பதியை பரிபூர்ணமாக அநுபவிக்கப்பெற்று அவ்வநுபவபரீவாஹமாக அவனுக்கு கைங்கர்யம்பண்ணுகிறான் என்று ஸாதித்தார். வேதார்த்தஸங்க்ரஹத்தால் உபநிஷத் அர்த்தங்களைச் சுருக்கமாக அருளிச்செய்து ஸ்ரீ கீதாபாஷ்யத்தால் கீதோபநிஷத்திற்கு பரமதாத்பர்யத்தை அருளினார். எம்பெருமானை அடைதற்கு உபாயமான பக்தியோகத்தில் அதிகாரமில்லாதவர்கள் ப்ரபத்தியை ஸ்வதந்த்ரமாகப் பற்றி அவனை அடையலாமென்று கத்யத்ரயத்தால் ஸாதித்தார். இங்கிருந்தகாலத்தில் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கார்யங்களில் அங்கியாகவுள்ள பகவானுடைய ஆராதநத்தைப்பற்றி நித்யத்தில் அருளியபடி. இப்படி ஸ்ரீமந்நாதமுனிகளால் ப்ரவ்ருத்தமாயும் ஸ்ரீ ஆளவந்தாரால் வ்ருத்திபண்ணப்பட்டதாயுமுள்ள நம் ஸம்ப்ரதாயமானது ஸ்ரீபாஷ்யகாரரால் நன்கு ரக்ஷிக்கப்பட்டது. இவ்வித மஹோபகாரங்களால் நம் ஆசார்யபரம்பரையில் நடுநாயமாக விளங்குகிறார் ஸ்ரீ இராமாநுஜன்.

இன்னும் இம்மாதத்தில் கிடாம்பியாச்சான் முதலியாண்டான் முதலிய ஆசார்யர்களும் திருவவதரித்துள்ளனர். இப்படி அநேக மஹாசார்யர்கள் இம்மாதத்தில் திருவவதரித்தபடியால் இம்மாதம் நமக்கு பரம உத்தேச்யம். இவ்வாசார்யவள்ளல்களின் திருவவதாரதினங்களை நாம் யதாசக்தி கொண்டாடி அவர்களிடத்தில் க்ருதஜ்ஞதையுடையவர்களாக இருக்கவேண்டியது நமக்கு விதிபலப்ராப்தம்.

ஸ்ரீ:

தேவகிசிங்கமாகி வந்த தெள்ளிய சிங்கம்

தேனினுமினிய தீந்தமிழ்ப்பாக்களைத் தேவதேவனது திருவடியில் சூட்டி மகிழ்வார்கள் ஆழ்வார்கள். அவர்களில் பெரியாழ்வார் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு மிகுந்து அப்பெருமானைப் பலபடியாலும் பாடிப்பாடி யநுபவித்து அவ்வநுபவத்தை உலகத்திற்கும் உதவியிருக்கிறார். தமிழ் இலக்கிய நூல்களில் பிள்ளைத்தமிழ் என்பது ஓர் மிகச்சிறந்த இனிமையான அநுபவம். ஸ்ரீ விஷ்ணுசித்தர் இம்முறையைப் பின்பற்றி, குழந்தைப்பருவம் தொட்டே தனது பரம்பொருள் தன்மையை உலகுக்கு அறிவித்துப்போரும் ஸ்ரீ க்ருஷ்ணாவதார திவ்ய லீலாம்ருதங்களைக் குறித்து ஓர் பிள்ளைத்தமிழ் பாடுகிறார். 'பொலிவிலும் பொருட்செறிவிலும் அநுபவிப்பவர்களுக்கு என்றும் எங்கும் அழிவில் இன்பம் அளிப்பதிலும் இப் பெரியாழ்வார் அருளும் ஸ்ரீ கீதாசார்யன் பிள்ளைத்தமிழ் ஒப்புயர்வற்றது' எனப் பெரியோர் பணிப்பர். அதைப் பலபடி சிந்தித்து அநுபவிப்பவர்களுக்கு அத்தன்மை நன்கு தெரியும். அழகும் அருளும் மிகுந்து, கண்டோர் கேட்டோர் மனங்களைக் கவரும் தன்மையும் மிகுந்து, குழந்தைப்பருவந்தொடங்கியே பல அஸாதாரணமான அத்யாச்சர்ய லீலைகளைப் புரிந்த திருவவதாரமூர்த்தியின் பெருமை பிள்ளைத்தமிழுக்கே— ஏன்? தமிழ்மொழிக்குங்கூட—அழகும் பெருமையும் தருவதொன்றல்லவா?

ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மாவின் திருவவதாரங் குறித்து பிள்ளைத்தமிழ் பாடிவரும் பட்டர்பிரான், அப்பருவங்களில் ஒன்ருகிய சப்பாணிப் பருவம்பாடி யநுபவிக்கிருர். ஓர் குழந்தையின் வளர்ச்சியில் அக்குழந்தை நடந்துப்பழகுவதற்குமுன் கால்களை மண்டியிட்டுக் கைகளைத் தட்டிக்கொண்டு ஆநந்திக்கும் பருவத்துக்கு சப்பாணிப்பருவம் என்பது பெயர். பெரியாழ்வார் பாடும்போது இப்பருவத்தினிடையே ஓரிடத்தில் ஸ்ரீ க்ருஷ்ணன் பூதனையின் விஷப்பாலுண்டமையைப் பாடும் பாசுரத்தில் ஸ்ரீ நரஸிம்ஹாவதாரத்தையும் பாடி யநுபவிக்கிருர். அப்பாசுரம் வருமாறு:—

'அளந்திட்ட தூணை யவன்தட்ட ஆங்கே
வளர்ந்திட்ட வாளுகிர்ச் சிங்கவுருவாய்
உளந்தொட் டிரணியன் ஒண்மார்வகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி பேய்முலை
யுண்டானே சப்பாணி'

ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீக்ருஷ்ணவதாரத்தை எடுப்பதற்கும் இன்னும் சில அவதாரங்களுக்கும் முன்னே யுகாந்தரத்தில் எடுத்தது ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரம். ஒரேஸமயத்தில் ஹிரண்யஸம்ஹாரமும், ப்ரஹ்லாதனுக்கு அநுக்ரஹமும் புரிவதற்குத் திடீரென்று தோன்றிய அவதாரம் அது. அதற்குக் குழந்தைப்பருவம் உண்டென்பது யாவருமறியாதவொன்ருகும். அதற்குப் பிள்ளைத்தமிழ் பாடுவதும் இயலாது. பாடியவரும் எவருமிலர். 'அப்படிப்பட்ட ஓர் அவதாரத்தை ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்தைக் குறித்த பிள்ளைத்தமிழில் பாடியது முறையா?' எனப் பலர் சங்கிக்கக்கூடும். ஆனல் பரதத்வநிர்த்தாரணம் பண்ணிய மஹாபாகவதோத்தமராகிய பெரியாழ்வார் முறையல்லாததைக் கூறுவாரா? ஒருக்காலும் கூறர். ஆதலின் அவர் பாடியதன் உட்கருத்தென்னவென்று கண்டறியவேண்டுவது நம்போலியர் கடமையாகும். ஆனல், முன்னைய அவதாரங்களின் பெருமையைக் குறிப்பிட்டு, இப்படிப்பட்ட பெருமைகளையுடையவன் என்று பின்னைய அவதாரங்களைப் பேசுதல் கவிகளின் இயல்பும் உலகவழக்கமுமாகும். இப்படியிருப்பினும், ஸ்ரீ விஷ்ணுசித்தர்போன்ற மஹான்கள் அவ்வண்ணம் கூறுவதற்குத் தனியாகவதாவது உட்கருத்தும் ஹாவவிசேஷமும் இருக்கவேண்டிய தவச்யமாகையால் இதனைச் சற்று ஆராய்வோம்.

ப்ரஹ்லாதாழ்வானை ஹிரண்யகசிபு பலவிதமாக ஹிம்ஸித்து முடிவில் 'அந்த நாராயணன் எங்கேயிருக்கிருன் சொல்' என்று கேட்க 'எங்குமுளன் கண்ணன்' என்று நாராயணஶப்தார்த்தத்தின் ஒரு பகுதியை வெளியிடுகிருர்பாகவதோத்தமராகிய ப்ரஹ்லாதாழ்வான். அம்மட்டோடு மநம்பொருந்தாத ஹிரண்யன் பின்னும் ஒவ்வொருபொருளாகக் காட்டி இங்குளனு அங்குளனு என்று கேட்டும், 'இங்குமுளன் அங்குமுளன் எங்குமுளன் என் கண்ணன்' என்ற உத்தரத்தையே பெறுகிருன். தன் ஆளுகைக்குட்பட்ட எவ்விடத்திலும் பகவான் இருக்கமாட்டார் என்று ஓர் முதிய மூட எண்ணங்கொண்ட ஹிரண்யனுக்கும், ப்ரஹ்லாதாழ்வானுடைய ஸத்யந்தோய்ந்ததும், அசைக்கவொண்ணுததும், ஸந்தேஹவிபரீதமற்றதுமான உத்தரம் சிறிதுசிறிதாகத் தளர்ச்சியைக் கொடுக்கிறது. உடனே ஓர் யோசனை செய்கிருன். பலமான யோசனை. உடனே, தான் வெற்றிபெற்றதுபோன்றதோர் உணர்ச்சி அவனைப் பற்றிக்கொள்ளுகிறது. தனக்கெதிராக வாதிக்கும் தனது சிறுவனை அடங்கச் செய்ய முக்யமான ஓர் ஸாதகம் அகப்பட்டதாக எக்களிக்கிருன். பரமபாகவதசிகாமணியாகிய ப்ரஹ்லாதாழ்வானையா வெல்ல முடியும்? ஆத்திரக்காரன் எதைக் கண்டான்! அவனுடைய ஸபாமண்டபத்தில் ஓர் தூண் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தத்தூண், ஹிரண்யனுடைய ஆயுராரோக்யாதி க்ஷேமங்களைக்குறித்துக் கைதேர்ந்த சிற்பிகளால் சட்டப்பட்டது. இவனுடைய க்ஷேமத்திற்கும் அந்தத்தூணின் நிலைக்கும்சேர்த்து மந்த்ர யந்த்ர ஸ்தாபநங்களுடன் நிறுவப்பட்டதூண் அது. இவனது ஆயுள் ஆரோக்யங்களை அளந்து இட்டதூண் அது. அதைக்கட்டும்போதே அவனும் கூடவேயிருந்திருக்கிருன். அந்தத் தூணிற்குள்ளே புரைகளோ சந்துகளோ கிடையாது என்பதை நன்கறிவான். ஆதலால் அந்தத் தூணிற்குள்ளே அந்த ஹரி இருப்பதற்கு இடமும் கிடையாது. அதற்

குள் புகவும் இடமில்லை. கட்டும்போதே அப்படி யாரும் அதற்குள்ளே நின்றதுமில்லை யாகையால் அதற்குள் யாரும் எதுவும் இருக்க முடியாது என்றவோர் எண்ணங்கொண்டான் ஹிரண்யன். உடனே மகனைப் பார்த்தான், 'மற்றெல்லாவிடங்களிலும் நீ சொல்லும் நாராயணன் இருக்கிறான் என்றே வைத்துக்கொள்வோம். ஆனால் இதோ நிற்கும் தூணில் என் இல்லை' என்று கேட்டான். நாராயணனுக்கு இடமல்லாததுமுண்டோ? இவனது அறியாமையையுணர்ந்த ப்ரஹ்லாதன் 'இன்னின்ற தூணிலுமுளன் நீ சொன்ன சொல்லிலுமுளன்' என்றான். காண்பவை கேட்பவையனைத்துமவனே என்னும் துணிவுபெற்றவன் பின் எப்படிச் சொல்லுவான்? வந்ததுகோபம் ஹிரண்யனுக்கு. ஸாமாந்யமான கோபமல்ல. மஹாமஹாகோபம். ஹா! அப்படியா!! இங்குமா இருக்கிறான்? என்றான். அறைந்தான் அத்தூணை. தனது நன்மையைக்கணித்துத் தானேயிருந்து கட்டிய தூணை—தனது ஆயுட்காலத்தை யளந்திட்ட தூணை யறைந்தான். அந்தத்தூணையறைந்து பொடியாக்க முயற்சித்தால் அதுவே இவனது ஆயுள்முடிவுக்கும் ஸூசகமல்லவா? அதையறைந்தவுடன் உள்ளிருந்து சிரித்த சிங்ககர்ஜனையிலேயே இடியினால் தாக்குண்டதுபோல் உணர்ந்தான். உள்ளிருந்த சிங்கம் வளர்ந்தது. தூணும் பிளந்தது. ஆதியிலே இவன் வரங்கேட்கும்போதே பாதி சிங்கவுருவமும் பாதி மானிட உருவமும் பெற்று அவதரித்தது அச்சிங்கம். இங்குளன் அங்குளன் என்று அவன் கேட்கும்போது ப்ரபஞ்சம்முழுதுமுள்ள ஒவ்வோர் பரமாணுவிலுங்கூட நிற்பதற்காக ஒன்றுபலவாகவும் பலபலவாகவும் பெருகி வளர்ந்தது அந்நரசிங்கம். தூணைத் தட்டியவுடன் அங்கேயே அதற்குள்ளேயே மிகப்பெரிதாகி வளர்ந்து தூணையே பிளந்துகொண்டு வந்தது. அத்துடன் அதனது நகங்களும் வளர்ந்தன. சிங்கம் ஹிரண்யன் மார்பில் கையை வைத்தது. அவனது உள்ளத்தையும் தொட்டது தொட்டதுபாதி [illegible]! [illegible]ன் அச்சிங்கத்[illegible]தைக்கண்டவுடன் மி[illegible]பாய்வதுபோல் அவனது உள்ளத்தினுள்ளே பாய்ந்தது. அவ்வுள்ளத்தையே களவாடித் தன்னுடையதாக்கிக்கொண்டது. (தொடுதல்-களவுசெய்தல்) அத்துடன் நில்லாமலே மேலேமேலே மிகப்பெரிதாக வளர்ந்துகொண்டே போயிற்று. அப்படியது வளர்ந்தால் மேலேமூடிக்கொண்டிருக்கும் வஸ்துவும் வளர்ந்தாலல்லவா? அதெப்படி வளரும்? வளர்ப்பவன் மனம்வைத்தாலல்லவா வளரும்? நரசிங்கம் உள்ளே வளர்ந்தது. தூண் வெடித்தது போலவே ஹிரண்யன் சடலமும் வெடித்தது. பிள்ளை வளரும்பருவம் பாடும் பெரியாழ்வார் 'ஆங்கே வளர்ந்திட்டவாளுகிர்ச் சிங்கவுருவாய் உளந்தொட்டு' என்று ந்ருஸிம்ஹபகவானுடைய வளர்ச்சியைப்பாடும் அழகுதான் என்னே! தூணில் வளர்ந்து வெளிவந்த சிங்கப்பிரான் 'உலகமனைத்தையும் தன்னுடையதாக்கிக்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்திற்கு இருப்பிடமல்லவோ இம் மார்பு? எல்லையற்ற அஹங்கார மமகாரங்களின் இருப்பிடமல்லவோ இந்த மார்பு' என்று அந்த மார்பைப் பிளக்கத் தனது நகங்களாகிய கூறிய வஜ்ராயுதங்களை அதன்மேல் நாட்டவும் அதேஸமயத்தில் உள்ளத்திலிருந்து சிங்கம் வளர்வதால் அம்மார்பம் பிளந்துபடவும் நேருகிறது. மார்பம்பிளக்கவும் கையையிடவும் சரியாகவிருக்கிறது. 'உளந்தொட்டு இரணியன் ஒண்மார்பகலம் பிளந்திட்ட கைகளால்' என்ற அடியை நோக்குக. இவ்வழியாகப் பொருளுரைத்தல் பலருக்குப் புதிதாகத் தோன்றினும் பாசுரத்தின் நயம் நோக்கிக் கூறப்படுகிறது. எப்படியும் நரசிங்கம்பிளந்ததைப்பற்றி அபிப்ராயபேதம் கிடையாது. உணர்வற்றவர் உள்ளத்துள் புகுந்து ஒறுத்திடுஞ் சிங்கமவன்.

இந்தப் பாசுரத்தில் பெரியாழ்வார் 'பேய்முலையுண்ட பெருமானே நீ நரசிங்கமாயபோழ்தில் மஹாலீலாம்ருதம் புரிந்த மாபெரும் சீர்மையுடைய உனது திருக்கைகளால் சப்பாணிகொட்டுவாய்' என ப்ரார்த்தித்திருக்கிறார். அவன் சப்பாணி கொட்டுதல் ஸத்துக்கள் வாழவும் அஸத்துக்கள் தாழவுமல்லவா? தாயுருவங்கொண்டு முடிக்க எண்ணி[illegible] பூதனை [illegible] தாயினிடம் அன்புடன் [illegible]விச்சென்[illegible] குடிக்கும் குழந்தைபோ[illegible] விரும்பிச் [illegible] முடித்தாய். விஷப்பால்கொடுத்து மாய்க்க நினைத்தாளவள். அந்த

விஷப்பால்குடிப்பதன்மூலமாகவே அவளுயிரையும் குடித்து முடித்தனே. அவள் உன்னை முடிக்கநினைத்தவழிகளாலேயே அவளை முடித்தனையே! இதென்ன ஆச்சர்யம்! ஆனால் இது போன்ற செய்கை உனக்குப் புதிதல்லவே. தான் நீடித்து உயிர்வாழவேண்டிப் பலவிதமாக யோசனைகள்செய்து அனேக வரங்களைப் பெற்ற ஹிரண்யனை, அவன்பெற்ற வரங்கள் பழுதுபடாமலும் அவன் வரங்களில் குறிப்பிட்ட வழிகளில் சிக்காமலும் அநிதரஸாதாரணமான அத்யாச்சர்யமான திருவவதாரமொன்று செய்தருளி உனது பெருமைவாய்ந்த லீலாரஸத்தினால் முடித்தவனல்லவா நீ? எவ்விடத்திலும் நீ இருப்பதற்கு மனம்பொறாத அசுரனுடைய மனத்தைமற்றெவருக்குமின்றி உனக்கே சொந்தமாகப் பறித்துக்கொண்டவனல்லவா நீ? அப்படித்தானிருக்கிறது இக்கிருஷ்ணவதாரத்திலும் நீ புரியும் திருவிளையாடல். ஆனால் ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தில் முதிர்ந்தபருவத்தில் செய்த லீலையை ஸ்ரீக்ருஷ்ணவதாரத்தில் குழந்தைப்பருவத்திலேயே செய்கிறாயே. என்னே உன் பெருமை' என்று வியந்து அநுபவிக்கிறார் ஸ்ரீ விஷ்ணுசித்தர். மூன்று உலகங்களையும் நரஸிம்ஹ சர்பம் ஆக ஸங்கல்ப்பித்த ஸர்வேச்வரன் அவ்வண்ணமே இப் பிள்ளைத்தமிழ்ப்பாசுரத்தையும் சடாக்ஷித்து அருளும் தன்மையும், தேவகிசிங்கத்தின் மஹிமையில் தெள்ளியசிங்கத்தின் மஹிமையையுங் கலந்து நமக்கு அருளும் பட்டர்பிரானின் மெய்ஞ்ஞானத் திண்மையும் அளவிடற்பாலதோ?

ஸ்ரீ:

உபயவேதாந்த ஜககண்ட்யம்

(11-வது ஸம்புடம் 4-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

அவன் உன்னிடத்தில் ப்ரியமயமாய் உன்னை ரக்ஷிக்கவே தீவ்ரமான ஆசைகொண்டிருப்பதால் அவன் ஸர்வேச்வரனாயிருப்பினும் அவனை நீ பற்றுவது மிக ஸௌலபம் என்பதைக் காட்டுகிறார். அப்படி ஸர்வஸ்மாத்பரன் உனக்கு நித்யஸம்ச்லேஷம் தர தீவ்ரகாமுகனாய் இருக்கையில் நீ ப்ரதிஸ்நேஹம் செய்யவேண்டாவோ. ப்ரீதிக்கு ப்க்திதரவேண்டாவோ. ஸம்ஸாரபயங்களால் சூழப்பட்ட நீ அந்த பயத்திலிருந்து உன்னை ரக்ஷித்து அபயமளிக்க உன் அருகே காத்திருக்கையில் அப்பதியை ஆச்ரயிக்கவேண்டாவோ. 'ஸர்வகுஹ்யதமம் — ஸௌஹார்தம் ஸர்வதேஹிநாம் ஜ்ஞாத்வா மாம்' என்ற கீதா காநத்தையும் ஸூசிக்கிறார். இத்திருவாய்மொழியில் 'முற்றவும்' 'அடங்கலும்' 'முற்றிலும்' என்று திரும்பவும் திரும்பவும் படிக்கப்படுகிறது. 'ஸர்வம் வை தஜ்ஞாநிதி ஸாக உபாஸீத' 'யேந தஸ்யாத்யேதா ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி' 'வாஸுதேவஸ்ஸர்வம்' முதலிய ப்ரமாணங்களை நினைவூட்டி ஆநந்தனாகிய பரனை ஸர்வத்திற்கும் ஆத்மாவாய் ஸாரமாய் நிறைந்துளனென்கிற தத்வத்தை ஸததமும் இன்பமாகப் பயிற்சிசெய்கையில் 'ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்' என்ற முண்டகச்ருதி ஓதியபடி. 'நிற்கின்றதெல்லாம் நெடுமால்' என்கிற ஸூத்ருடமான நீண்டமால் விஷயமாலே சூழும் இன்பமய அநுபவமே வெள்ளமிட்டோடுமென்பதை ஸூசிக்கிறார். அவன் பற்றுக்கில்லாய் 'தஸ்ய ப்ரியமேவ சிர:' என்றபடி ப்ரியம் உன்மஸ்தகமாய் ஆநந்தமயமாய் உன் ஸததஸம்ச்லேஷாபேக்ஷனாய் முற்றவும் சுற்றி நிற்கையில் நீயும் ரஸிகனாய் அவன் விஷயமான பற்றுக்கு இல்லாய் 'பற்றிலையாய்' அவனுக்குள் முற்றிலும் நிரந்தரமாய் நுழைந்து 'யோ வேத நிஹிதம் குஹாயாம்' என்றபடிகளில் லயித்து அடங்கவேண்டியதே உசிதம். 'அவன் முற்றிலடங்கே' 'அவனையே எல்லாமாகப்பற்றப் பார்' என்று ஈடு. 'வாஸுதேவஸ்ஸர்வம்' என்கிற கீதாவசநத்தையும் 'ரஸோ வை ஸ:' 'ஏதா விதா

ஜ்ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத் கதி-நாராயண:' என்ற ஸுபாலோபநிஷத்தை தையும், 'பிதா மாதா ஸுத ப்ராதா தாரா மித்ராதயோ பி வா । யஸ்யைகஸ்ய ஹயோ-ஹாய ஸர்வஸ்மை தஸ்மை நம: ॥' என்கிற வசனத்தையும் ஈடு உதாஹரித்தது. 'ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய: । யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம்' என்கிற கீதாச்லோகத்தையும் இங்கே நினைவூட்டுகிறார்.. அவன் பற்றிலன் — பக்ஷபாதமில்லாதவன். ஸர்வஸமன். அவனுக்கு நம்மைக்கரையேற்றி சாச்வத இன்பஸம்ச்லேஷம் தரவேண்டுமென்று தீவ்ரமான பற்று இருந்தாலும், அவன் ஸர்வஸமனுனதால் இப்பற்று எல்லோர் விஷயத்திலுமுள்ளது. அவனுக்கு வைஷம்யபக்ஷபாததோஷங்கள் வாராதபடி நீ அவனிடத்தில் பற்றிலையாய் பக்தியோடு அவனை பஜநம் செய்யவேண்டும். ப்ரீதியோடு பஜநம் செய்து 'மயி தே' என்று அவன் ஆசைப்படுவதைப்போல் அவனுக்குள்ளேயே அடங்கவேணும். அப்படி அடங்கினுல் 'தேஷு சாப்யஹம்' என்றபடி அவன் அந்த பக்தரிடம் மாமேலேயேறி நித்யம் ப்ரியஸந்நிஹிதனுய் இருப்பனென்பதில் ஐயமில்லை. 'அவன் முற்றிலடங்கே' என்பதால் நீ தன்மயனுகி உன் தனிமையும் தவிர்ந்து அவனை நீயென்று சதுர்த்யந்தாதிப்ரணவத்தால் உன் ப்ரதக்ஸ்திதியே உணர்வுக்கு வாராமல் உயிர் வேறின்றி ஒருயிராய் அவனுள் அடங்க வேண்டும் என்னும் அவிபாகாநுபவத்தை ஸூசிக்கிறார்.

ஏழாம்பாட்டு.

அடங்கெழில்சம்பத் தடங்கக்கண்டீச
னடங்கெழிலஃதென் றடங்குகவுள்ளே.

[திருவாய்மொழி. 1-2-7]

அவனுள்ளே அவன் முற்றிலடங்கவேண்டிய வழியை விவரிக்கிறார். உபயவிபூதிகளும் அவனுடைய விபூதி. அவனுடைய அம்சம். ஸர்வசேதநாசிகளும் அவனுடைய அம்சம் என்பதை 2-மத்யாயம் 3-ம் பாகம் முடிவில் அநேக ஸூத்ரங்களால் விஸ்தாரமாக விளக்கியதை 3-மத்யாயம் 3 ம் பாதத்தில் அஹிகுண்டலாதிகரணத்தில் 'உபயவ்யபதேசாத்' என்கிற ஸூத்ரத்தால் நினைவூட்டி உபயவிபூதிக்குள் சேதநராசியைப்போல் போக்யமான உபயவிபூதிகளும் அவனுக்கு அம்சமே என்று நிர்ணயித்திருப்பதை இங்கே ஸூசிக்கிறார். அஹிகுண்டலாதிகரணத்திற்கு முன் அதிகரணமான உபயலிங்காதிகரணத்தில் 'நேதி நேதி' ச்ருதியையும் உதாஹரித்து மூர்த்தாமூர்த்தஸகல ப்ரபஞ்சமும் அவனுடைய எல்லையற்ற விபூதி. அவன் ஸம்பத்து. ஆநந்தமயனுன அவனால் வ்யாபிக்கப்பட்ட விபூதிமுழுவதும் ஸ்வபாவமாக ஆநந்தமயமே. நம்முடைய சர்மோபாதியால் ப்ரதிகூலமாக அநுபவிக்கப்படுகிறதேயொழிய வஸ்துதத்வத்தில் அது முழுவதுமநுகூலமே. நமக்கு ப்ரியசேஷியான பதியினுடைய உஜ்வலமான போக்யஸம்பத்தே. 'ஜ்ஞாயநம் ஹி பரிவாஹணஶேஷவ்ருத்தி:' என்று கீதாபாஷ்யத்தில் ஸாதித்தபடிக்கும், 'க்ருஸ்நம் ப்ரஸக்திர் நிரவயவத்வ ஶப்தகோபோ வா' என்ற அந்த அதிகரணஸூத்ரத்தில் ஸாதித்தபடிக்கும் அவனுள்ளே முற்றிலடங்கி அநந்யனுய் பஜநம் செய்தால் 'ப்ரகாஶவச்சாவைஶேஷ்யம்' 'ப்ரகாஶஶ்ச கர்மண்யப்யாஸாத்' என்கிற அதனடுத்த ஸூத்ரத்தில் ஸாதித்தபடிக்கு க்ருத்ஸ்நசேதநாசேதநவிபூதிவிசிஷ்ட ஓர் உயிரான விசிஷ்டாத்வைத தத்வம் இன்பமயமான அநுபவத்திற்கு வருமென்று ஸாதிக்கப்பட்டதையுமிங்கே ஸூசிக்கிறார். இங்கே திருவாறுயிரத்தில் அவனுடைய உபயவிபூதி வைசிஷ்ட்யத்தைக் கூறி 'அந்த ஸம்பத்தெல்லாம் எம் ஸ்வாமியினுடைய ஸம்பத்தென்று அநுஸந்திக்கவே கூசாதே சென்று அணுகலாம். அப்படி அநுஸந்தித்துக்கொண்டு கூசாதே சென்று அடிமைசெய்யுங்கோள் என்கிறார்' என்று ஸாதிக்கப்பட்டது. ஈட்டில் 'போகபூமியாய் இருக்கும் நித்யவிபூதி. கர்மநிபந்தநமாக அவனாலே நியாம்யமாயிருக்கும் இவ்விபூதி. அதில் தநீயமென்று அநுஸந்திக்கப்புக்கவாறே கர்மநிபந்தநமான வாசாரம் தோற்றாதே ததீயத்வ காரமிறே தோற்றுவது என்று ஸாதிக்கப்பட்டது. 'எழில் சம்பத்து' என்றதால் பகவதாத்மகமான விபூதிமுழுவதும் ஆநந்தாத்மகம் என்று தைத்திரீயோபநி

ஷத்தும் பூமவித்யை முதலியனவும் உபயலிங்காதிகரணமும் தெளிவிக்கும் வேதாந்தரஹஸ்யத்தை விளக்குகிறார். ‘ஸகலவிபவதயா’ என்ற ரத்னவளி விபவமென்னும் விபூதிமுழுவதும் ஸ்வபாவத்தில் சுபமயமே என்பதை இப்பாட்டின் ஸாரமாக விளக்கிற்று. ‘எழில்’ என்பதற்கு உஜ்வலமென்று பொருள். ‘எழில் சம்பத்து’ என்பதை இருதரம் படிப்பதும் ரஸிக்கத்தக்கது. முதலில் ‘அடங்க’ அதாவது முழுவதும் — நிச்சேஷமாக — க்ருத்ஸ்நமாக, எழில் ஆநந்தோஜ்வலமான விபூதி என்று பாடி, மறுபடியும் அந்த விபூதியை ஆநந்தஸ்வபாவமாய் இருப்பதைக்காட்டிலும் அது நமக்கு அத்யந்தப்ரியனும் சேஷியும் பதியுமான விச்வரனுக்குள் அடங்கியது. அவனால் அவ்விபூதியடங்கலும் ஸ்வாமிக்கு அத்யந்தப்ரியமான நம்முடைய விஷயத்தில் அநுகூலமும் ஆநந்தமுமாகவே யிருக்குமென்கிற ததீயத்வப்ரயுக்தமான ஆநந்த, ஔஜ்வல்ய, நையத்யத்தை ஈசனுள் அடங்குவதென்கிற எழில் உடையது. அஃது அவ்விபூதி என்ற ததீயத்வாநுஸந்தாநத்தால் விபூதியடங்கலும் இன்பமே பயக்கும் பயிற்சியைக் கூறுகிறார். இப்பாசுரத்தில் ‘அடங்க’ ‘அடங்கக்கண்டு’ என்பதால் க்ருத்ஸ்ந உபயவிபூதி விசிஷ்டமான ஓர் உயிரின் அநுஸந்தாநப்பயிற்சி நம் தர்சநமென்று விளக்குகிறார். அர்ஜுனன் ஸேவிக்கப்பெற்ற விச்வரூபக்காக்ஷியையே ஸர்வகாலமும் மாநஸாநுபவமாக்கவேண்டுமென்பதை விளக்குகிறார். பரமனைப் புத்ரனாகப் பெற்றுமுன் தவம்புரிந்த காச்யபர் ‘ஸ்ரீரேஷ தவ வஸ்யாமி ஜகத்ஸர்வம் ஶரீரம் தே’ என்று மதுஸூதனனை ஸாக்ஷாத்கரித்துத் துதித்தாரென்று பாலகாண்டத்தில் விச்வாமித்ரர் முகமாக வால்மீகி கூறினார். ‘த்யாவாப்ருதிவ்யோரிதமந்தரம் ஹி நித்யம் யுக்தா உபாஸதே’ என்று கீதை விச்வரூபஸேவையருளியபிறகு த்வாதசாத்யாயாரம்பத்தில் பகவான் பாடினதை நினைக்கிறார். அடங்க, அடங்கல், அடங்கு என்ற பதங்களுக்கு நிச்சேஷமாக, பரிபூர்ணமாக என்ற பொருளும் ஈசனுக்குள்ளே தனிமையின்றி அத்யந்தம் ததீநமாய் அநந்யமாய் அடங்கி ஒடுங்கி இருப்பதென்கிற பொருளுமுள. இப்படி இரண்டுபொருளும் சேரும்படி தமிழ்ப்ரயோகம் ரஸிக்கத்தக்கது. விபூதியடங்கலும் அவனுள்ளே அடங்கலும் (முழுவதும்) தனிமையின்றி ஸ்வாதந்த்ரியமின்றி இட்டதுசட்டமாய் அடங்கியுள்ளது போல அவ்விபூதியில் அடங்கிய நீயும் அவனுக்குள் அடங்குவதே பிழைக்கும் வழி. ஸர்வகாலமும் இன்புறும் வழி. தத்வநிலை மோக்ஷோபாயம். ப்ராப்யமான மோக்ஷம் என்று அறுதியிடுகிறார். ‘அடங்குகவுள்ளே’ என்பதற்கு ‘ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தஜ்ஞாநமடியாக தானுமவன் விபூதியிலே ஒருவனாய் அந்வயிக்கலாமிறே’ என்று ஈடு. ‘ஏகதேசஜ்ஞாநமாத்ரத்தால் முக்திவராது. ஸர்வவிசிஷ்ட ப்ரஹ்மாநுபவப்பயிற்சியால்தான் முக்திபெறலாம்’ என்று ஸ்ரீ மத்வாசார்யரும் ஜயதீர்த்தரும் கூறியுள்ளனர். ஸர்வைகத்வபாவனை மோக்ஷோபாயமென்றும் ஸர்வைகத்வாநுபவமே மோக்ஷமென்றும் ஸ்ரீ சங்கரர் பணித்தார்.

(தொடரும்)

ஸ்ரீ:

நந்தனோத்ஸவ நினைவுகள்

அருளாளர் தாமெனினும் தமக்கொவ்வார். அவ்வருளாளன் இதுவரை கண்டருளிய வைசாகப்ரஹ்மோத்ஸவங்களனைத்தும் இந்த நந்தன ஸம்வத்ஸரமஹோத்ஸவத்திற்கொவ்வா.

* * * * * * *

புதன்கிழமை (4-6-52) காலை த்வஜாரோஹணம். அன்று சிற்றஞ்சிறுகாலையில் ஹஸ்திகிரியினின்று திருமணியோசையும், நாதஸ்வர பாண்டுகளின் ஒலியும், ஸ்வஸ்திவாசநங்களின் மங்களநாதத்தோடு கலந்து திகழ வெகுவேகமாக நாச்சிமார்களோடு அருளாளன் எழுந்தருளியாயிற்று. 'வவ்ருதாதிவ நிஷ்க்ராந்தோ ஸிம்ஹோ கிரிகுஹாஸய:' என்று சக்ரவர்த்தித்திருமகன் புறப்பாட்டை வால்மீகிபகவான் அநுபவிக்கும்போதும், 'மாரி மலைமுழஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும் சீரிய சிங்கம்......... முழங்கிப்புறப்பட்டு போதருமாபோலே' என்று கண்ணன் புறப்பாடு காணப் பாரித்துக் கோதை பாசுரம் பாடும்போதும் மலையும் குஹையும் உபமானமாகமட்டுமிருந்தன. ராகவஸிம்ஹமும் யசோதை யிளஞ்சிங்கமும் சேர்ந்து சமைந்த இந்த சிந்துராசலச்சிங்கம் இரண்டு ஸிம்ஹிகளுடன் வெகுமிடுக்குடன் புறப்பட்டு வரும் இவ்வழகுக்கு ஈடும் எடுப்பும் இல. மிடுக்கு ஒருபுறமிருக்க வடிவழகோ வாசாமகோசரம். 'படிசேர் மகரக்குழைகளும் பவளவாயும் நாற்றோளும் துடிசேரிடையுமமைந்ததோர் தூநீர்முகில்போல் தோன்றும் சுடர்கொள் வடிவு. இம்முகிலேந்தும் நீர் அருள் நீரென்பது கொண்டு தூநீராயிற்று. 'கரிசைலக்ருஷ்ணஜலத: காங்க்ஷிதவர்ஷீ.'

வாஹநமண்டபம் சேர்ந்து அங்கிருந்துபுட்கொடியுயர்த்தி உடனே பொற்சப்பரத்தில் உதயாத்பூர்வம் 4-30 மணிக்கெல்லாம் புறப்பாடு தொடங்கிற்று. ப்ரதமஸேவை நம்மாழ்வாருக்கு. அவர் பரிவுடன் பல்லாண்டுபாட மஹோத்ஸவம் உபக்ரமித்துவிட்டது. இனி ஒவ்வொரு வேளைப் புறப்பாடும் ஒரு பெருங்கடல் கொந்தளிப்பில் ஏற்படும் அலைவரிசைகளே.

* * * * * * *

காலையில் சிங்கம்போல் புறப்பட்ட ப்ரபு மாலையில் சிங்கத்தின்மீது ஆரோஹணித்து மஞ்சள்வெயில் மேனியை மனோஹரமாகத் தழுவ கோபுரவாயிலை நிறைத்து அதனின்றும் வெளிப்புறப்படும்போது மீண்டும் ஒரு 'மாரி மலை முழஞ்சு' அநுபவம் அடியார்கள் உள்ளத்தில் நிரம்பியது.

* * * * * * *

இரண்டாம்காப்பு. ஆகமம் விதித்த புநரக்ஷாபந்தநம். ஆனால் அதையொட்டி நடந்த மஹோத்ஸவத்தின் தனி அழகை எப்படிப் பேசுவது? முதல்திருநாள் இரவு 2 மணி ஸுமாருக்கு மீண்டும் திருமணி கலகலவென ஒலிக்க ஸகல வாத்ய கோஷங்களுடன் பெருமாள் மட்டும் நேராக திருமலைக்கு எழுந்தருளியாயிற்று. அங்கே மூலவருக்கு அபிமுகமாகக்கோலப்படியில் எழுந்தருளியிருந்து திருவாராதநங் கண்டருளி இரண்டாவது மங்கள நாண் கையில் தரித்தருளியாயிற்று. உடனே திருமலையினின்றுமிழிந்து, முறையே அழகியசிங்கர், ஆண்டாள், விஷ்வக்ஸேநர், மலையாளநாச்சியார், மடைப்பள்ளி நாச்சியார் இவர்களுக்கெதிரே ஒவ்வொரு கணம் த்ரமதித்துப் பின்பு பண்டகசாலையாகிற உக்ராணத்தைக் கடாக்ஷித்துவிட்டு ஸ்ரீபெருந்தேவித்தாயார் திருக்கோயிலுள் நுழைந்தார் பெருமாள். அங்கே ப்ரபுவுக்கு அமோகமான வரவேற்பு. உயர்ந்த முறையில் உபசாரங்கள். மஹாமண்டபம் முழுதும் புஷ்பத்தாலும் தீபங்களாலும் அலங்கரிக்கப்பெற்று கவர்ச்சியான காட்சி யளித்தது. அதைத் தமது திருமேனி சோபையால் மீண்டும் அழகுபெறச்செய்து அங்கே ப்ரதி வெள்ளிக்கிழமையிலும் தாயார் எழுந்தருளும் ஊஞ்சலில் தாம் சற்று எழுந்தருளி லேசாக அசைந்தாடி எதிரேயுள்ள ஸ்ரீ பெருந்தேவிக்கும் ஏராளமாக நடுவே திரண்டிருந்த அடியார்களுக்கும் பேரின்பக்காட்சி யொன்று அளித்தருளி

யபடி. இது இவ்வருஷத்திய நவீன ஏற்பாடு. கணவனது வரவை ப்ரதீக்ஷித்துக்கொண்டு நன்ருகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு நிற்கும் நாயகிக்கு வாஸவஸஜ்ஜிகை யென்று பெயராம். அப்படிப்பட்ட நாயகிக்கு எடுத்துக் காட்டாகப் பெருந்தேவித்தாயார் இன்பகரமான கோலத்தோடு உள்ளே எழுந்தருளியிருந்தபடியே தனது ஆஹ்லாதமும் அபிமாநமும் தோற்ற பெருமாளுக்கு அர்க்யபாத்யாதி உபசாரங்கள் ஸமர்ப்பித்து ஓர் அழகிய துப்பட்டாவையும் ஊஞ்சல் ஸம்பாவனையாக அவரது திருத்தோள்களில் சாற்றி அவ்வழகுக்குக் கண்ணெச்சில் வாராமைக்காக மங்கள ஹாரத்தியும் செய்து வைத்தார். அவைகளைப் பெற்றுக்கொண்டு வெகு ஒய்யாரமாக உள்ளே எழுந்தருளி அந்த ராளத்தில் தாயாருக்கு அபிமுகமாக வீற்றிருக்க ஷோடசோபசாரங்களையும் இருவருமாகக் கண்டருளினர். ஜனங்களின் ஆநந்தமும் ஆரவாரமும் கரைகடந்து காணப்பட்டன. ஒரு அரைமணி நேரத்தில் வெளியே புறப்பட்டருளியாயிற்று. பிராட்டியுடன் கலந்து அநுபவித்தமை திருமேனியில் குங்குமக்குழம்பாலும் புஷ்பாலங்காரங்களாலும் தோற்ற நேராக வாஹநமண்டபத்திற்கு எழுந்தருளியாயிற்று. இப்படியாக ஸுமார் 4 மணிக்கு இரண்டாங் காப்பு உத்ஸவம் பூர்த்தியாயிற்று. என்ன உத்ஸவம்! என்ன உத்ஸவம்!! என்று அடியார் அனைவரும் ஆரவாரித்தனர்.

* * * * * * *

ஸரியாக 4-30 மணிக்கு ஹம்ஸவாஹநத்தில் புறப்பாடு. ஸ்ரீபாதம் தாங்குவோர் அப்படியே அசைத்தசைத்து எழுந்தருளச்செய்யும் போது ஹம்ஸம் சிறகை யடித்துக்கொண்டு மேற் கிளம்புவதாகவே காணப்பட்டது. ஹம்ஸம் வெளுப்பா, என்னப்பன் உடுத்திருந்த உடைகள் வெளுப்பா, அல்லது மலர்மாலைகள் வெளுப்பா என்று அன்பர்கள் முடிவுகூறமாட்டாத நிலையில் அற்புதமான வெண்ணிறமான கோலம். மேலே பரந்த இரு வெண்குடைகள் விரிக்கப்பட்டவுடன் இனி உலகிலுள்ள வெளுப்பெல்லாம் இன்று இங்கே திரண்டு விட்டது என்றே அனைவரும் எண்ணும்படி இருந்தது.

* * * * * * *

மாலையில் ஸூர்யப்ரபை ஸேவையில் அவனொளியால்தான் ஸூர்யனுள்பட எல்லோரும் ப்ரகாசிப்பது என்ற உண்மை ஊர்ஜிதமாயிற்று. அந்திபோல் சிவந்த திருப்பரிவட்டத்தோடு பரிதிவட்டத்துள்நின்ற நிலை, ஸூர்ய மண்டல மத்ய வர்த்தியான நாராயணன் இவனே என்று அனைவருக்கும் காட்டிக்கொடுத்தது. பதினறுகால் மண்டபம் தாண்டியவுடன் ஸாக்ஷாத் ஸூர்யனது மஞ்சள் வெய்யில் திருமேனியைத் தழுவியபோது ஒரு ஸூர்யனுக்கெதிரே ஒரு ஸூர்யன் திகழ்ந்ததுபோலிருந்தது. திருப்புகாலுக்குள் ஏராளமான கூட்டம் சேர்ந்துவிட்டது. காலையில் கருடோத்ஸவமன்றோ?

(தொடரும்)

ஸ்ரீ:

தேவபாஷை

உலகில் உள்ள ஜீவராசிகளுள் பகுத்தறிவினால் மிகவும் மேம்பட்ட மனிதவர்க்கத்தின் அதிர்ஷ்டவசத்தினல் ஏற்பட்டது பாஷை. தன் அபிப்ராய ஆவிஷ்காரணத்தோடு பகவத்குணநுபவத்தை அநுபவிப்பதற்கும் பாஷை இன்றியமையாதது. இப்படியே பாஷையின் பெருமையை பலவிதமாக எல்லையின்றியே சொல்லிக்கொண்டே போகலாம்.

ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரனை எப்படி 'நித்யன்' என்று வேதாந்திகளாகிய நாம் கூறுவோமோ அதேமாதிரி வ்யாகரணஶாஸ்த்ரக்காரர்கள் 'ஶப்தம்' நித்யமென்று சொல்வார்கள். 'அநாதிநிதநம் ப்ரஹ்ம ஶப்ததத்த்வம் யதக்ஷரம்' என்று பர்த்ருஹரி 'வாக்யதீபம்' என்ற வ்யாகரணக்ரந்தத்தில் கூறினர். ஸ்ரீகீதாசார்யனும் 'அக்ஷராணாமகாரோऽஸ்மி' என்று தான் அகாரவாச்யன் என்பதை

எடுத்துக்கூறினர். பதஞ்ஜலி (பாஷ்யகாரர்) 'ஸித்தே ஶப்தார்த்தஸம்பந்தே' என்று கூறி ஶப்தங்களும் அவைகளுடைய அர்த்தங்களும் நித்யங்கள் என்று கூறினர். இம்மாதிரி பல இடங்களிலிருந்து நம் பாஷை நித்யமானது என்று நாம் அறிகிறோம். இப்படியேற்பட்ட ஶப்தங்களில் எவைகள் உபாதேயங்கள், எவைகள் த்யாஜ்யங்கள் என்று யோஜித்துப் பார்த்தால் 'கௌ:' முதலியவை ஸாதுஶப்தங்களாகவும், 'காவீ' 'கோணீ' முதலியவைகள் அபஶப்தங்கள் என்றும் அறிகிறோம். ஸாதுஶப்தங்களாலான பாஷை உயர்ந்ததாகவும் அபஶப்தங்கள் நிறைந்த பாஷைகள் தாழ்ந்தவையாகவும் கருதப்படுகின்றன. ஆதலால்தான் நம் வைதிகபாஷையை 'ஸம்ஸ்க்ருதம்' (ஸம்ஸ்க்ருதம்) என்று வ்யவஹரிக்கிறோம். இப்பேர்ப்பட்ட ஓர் உயர்ந்த பாஷையை காலதேச வர்த்தமானங்களால் நாம் வெகுவாக ஆதரிக்க முடியாமலிருக்கிறோம். ஆனால் நிராதரவாக விட்டுவிடவில்லை.

நம்முடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிஷமும் அப்பாஷையின் உதவினாலேயே கழிக்கப்படுகிறது. நமக்கு இன்றியமையாத தத்துவங்களை எடுத்துக்கூறும் வேதங்கள், ஸ்ம்ருதிகள், இதிஹாஸபுராணங்கள் எல்லாம் நமது தெய்வீக பாஷையிலேயே காணப்படுகின்றன. நவீன ஆராய்ச்சிக்காரர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையையும், அப்பாஷையிலுள்ள பலகோடி க்ரந்தங்களையும் ஆராய்ந்து ஸம்ஸ்க்ருதபாஷையில்- ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களில் காணப்படாத அரியவிஷயங்களே இல்லையெனக்கூறலாம், என்றும் கூறுகின்றனர். பாஷாவிமர்சகர்கள் ஸம்ஸ்க்ருதபாஷை மிகவும் புராதனமானது என்றும் ஒப்புக்கொள்கிறார்கள். சுருங்கக் கூறின் இப்பாஷையின்றி நம் அறிவு வளர்ச்சி பூர்த்தியாகாது. உலகில் பல குழந்தைகளுக்கு தனித்தனியே மாதாபிதாக்கள் காணப்படுவதுபோல் பற்பல பாஷைகள் தோன்றியிருப்பினும், ஸர்வலோக பிதாவான ஸ்ரீயப்பதியைப்போல் ஸம்ஸ்க்ருத பாஷை உத்க்ருஷ்டமானதாய் விளங்குகிறது.

நம் தினசரிவாழ்க்கையில் ஸம்ஸ்க்ருதபாஷா பயிற்சியின்றி நாம் ஒருகாரியமும் செய்ய இயலாது என்பதை நாமெல்லோரும் நன்கு அறிகிறோம். நித்யகர்மாநுஷ்டானத்திற்கும் பகவத்ஸ்தோத்ராதிகளுக்கும் வைதிகலௌகிக வ்யவஹாரங்களுக்கும் ஸம்ஸ்க்ருத பாஷை இன்றியமையாதது. இம்மாதிரி பல காரணங்களால் நம்மால் நன்கு அப்யஸிக்கப்படவேண்டிய பாஷை 'ஸம்ஸ்க்ருதம்' ஆக இருப்பினும் நம் துரதிர்ஷ்டவசத்தால் இந்த பாஷையை நாம் அநாதரித்து வருகிறோம். வைதிக, லௌகிக. வித்யாஸம் இன்றி எல்லோருமே இந்த பாஷையின் வளர்ச்சியில் ஈடுபடவேண்டியிருக்க இதை அநாதரிப்பது நம்முடைய மதியீனம்தான். நம் குழந்தைகள் ஒவ்வொருவரும் ஸம்ஸ்க்ருதம் நன்கு எழுத, படிக்க, முடிந்தவரையில் வ்யவஹரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். தவிர நம்மில் பெரும்பான்மையோர் இக்கால நிலையில் ஸம்ஸ்க்ருதபாஷாபிவ்ருத்தியில் அதிகபங்கெடுத்துக் கொள்ளவேண்டும். 'ப்ராஹ்மணேந நிஷ்காரணோ தர்ம: ஷடங்கோ வேதோ(அ)த்யேயோ ஜ்ஞேயஶ்ச' என்ற கட்டளையை அநுஸரித்து வேதாத்யயநமும், வேதாங்கங்களின் பரிசீலனையும் நமக்கு அவசியமென்று ஏற்படுகிறது.

நம் ஸமூஹத்திலுள்ள ஒவ்வொருவரும் தம் தம் குடும்பத்தில் எல்லோரையும் இம்மாதிரி வித்யாஸம்பாதநத்தில் ஈடுபடச்செய்யவேண்டியது அவசியமாயிருக்க பெரும்பாலான குடும்பங்களிலுள்ளவர்கள் ஸம்ஸ்க்ருத எழுத்து வாஸனையே அறியாமலிருப்பது நம்முடைய துர்பாக்யநிலையை எடுத்துக்காட்டுகிறது. இம்மாதிரி ஓர் நிலை ஏற்பட்டதற்கு அரசாங்கத்தையோ, நம் பொருளாதார நிலையையோ காரணமாக எடுத்துக்காட்டுவது சிறிதளவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாயினும் அவைகளையே முக்கிய காரணமாகக் கூறமுடியாது. நம்முடைய பாபரூபமான மதியீனந்தான் முக்யகாரணம். நம்மில் ஶக்திவாய்ந்த பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே தாங்களாகவோ, இதரர்களைக் கொண்டோ இம்மாதிரி வித்யைகளைக் கற்றுக் கொடுக்க முடியும். ஶக்தியற்றவர்கள் இதரர்களின் உதவியாலோ, அல்லது பொதுஸ்தாப

னங்களின் மூலமாகவோ, தங்கள் குழந்தைகளுக்கு இப்பயிற்சியை அளிக்கலாம். நம்மில் பெரும்பாலோர் பொருளாதாரத்தையே ஓர் முக்யகாரணமாக எடுத்துக்காட்டி ஸம்ஸ்க்ருத பாஷை வளரமுடியாது என்று சொல்லுகிறார்கள். அது மிகவும் பிசகு. வித்யைக்கும், லோகத்தில் த்ரவ்யஸம்பத்துக்கும், ஒற்றுமையிருப்பதாகக் கூறமுடியாது. அது மாத்ரமல்ல. உலகில் பல பாகங்களிலும், பல காலங்களிலும் கற்றறிந்தவர்கள் தங்கள் ஜீவனத்திற்கே கஷ்டப்பட்டதாக நாம் பல சரித்ரங்களிலிருந்து தெரிந்துகொள்கிறோம். இம்மாதிரி அறிந்துகொண்ட விஷயங்களை நம் வாழ்க்கைக்கு உபயோகப்படுத்தவேண்டியது தான் நாம் படிப்பதின் ப்ரயோஜனம்.

தற்காலத்தில் ஸம்ஸ்க்ருதம் அப்யஸித்தவர்களுக்கு தேஹயாத்திரை நடத்துவதற்கு வேண்டிய வருமானம் இல்லாததே ஸம்ஸ்க்ருத வித்யையின் வளர்ச்சியின்மைக்குக் காரணம் என்று கூறுவதையும் நாம் கேட்டிருக்கிறோம். அதுவும் தவறு. ஏனெனில், சில தினங்களுக்கு முன்பு ஒரிஸ்ஸா ராஜ்யத்தைச் சேர்ந்த ‚கட்டாக்’ என்ற ஊரில் பாஷாந்தரத்தில் பி. ஏ., பட்டம் பெற்ற ஒருவன் தனக்கு உத்யோகம் கிடைக்காததால், ஓர் பியூன் உத்யோகமாவது கொடுக்கவேண்டுமென்று அவ்வூர் கவர்னருக்கு ஓர் மனு அனுப்பியிருந்ததாக ‚ஹிந்து’ (5–6-1952) பத்ரிகை மூலமாக நாம் அறிகிறோம். ஆனது பற்றி ஸம்ஸ்க்ருதபாஷாவளர்ச்சி தற்காலம் குன்றியிருப்பதற்கு கீழ் கூறப்பட்டவைகள் காரணமாகமாட்டா. நம்முடைய ஜன்மாந்தர பாபவிசேஷத்தால் இந்நிலையை நாம் அடைந்திருக்கிறோம். புத்திசாலிகள் இப்பாபத்தைப் போக்கிக்கொள்ள முயற்சிக்கவேண்டியது அவசியம். நாம் எல்லோருமே வ்யாஸ, பராசரர்களாகவோ, பாணிநி, பதஞ்ஜலியாகவோ ஆகிவிடமுடியாது. ஆனால் ஏகலவ்யனைப்போல் அம்மஹான்களை நம்முடைய முயற்சிக்கு ஆதாரமாகக்கொண்டு நாம் ப்ரயத்னம் செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள எல்லா ஶாஸ்த்ரங்களுக்கும் ‘காணாதம் பாணிநீயம் ச ஸர்வஶாஸ்த்ரோபகாரகம்’ என்றபடி ந்யாய, வ்யாகரண ஶாஸ்த்ரங்கள் மிகவும் அவசியமானவைகளும் உபகரிப்பனவையும் ஆகும். ஆதலால் இவைகளில் நமக்கு பயிற்சி மிகவும் அவசியம்.

இம்மாதிரி காரணங்களை திருவுள்ளத்தில் கொண்டுதான் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வண் ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் பரமக்ருபையுடன் நம் சிறுவர்களின் ஆத்மோஜ்ஜீவனத்திற்காகவும் வேத ப்ரபந்த ஶாஸ்த்ர பாடசாலை ஸ்தாபிக்கும்படி நேர்ந்தது. ந்யாய, வேதாந்தாதி ஶாஸ்த்ரங்களில் பாரங்கதரான ஸ்ரீமதழகியசிங்கர் பல பெரிய வித்வான்கள் இக்கலாசாலை மூலம் ஏற்படவேண்டுமென்று திருவுள்ளம் பற்றியது நம் ஸம்ப்ரதாயத்தின் பாக்யவிசேஷம். அப்படியிருந்தும் ஸமீபகாலத்தில் வித்யார்த்திகளின் எண்ணிக்கைகுறைந்துகொண்டேயிருப்பதைப் பார்த்தால் ஓர் பெரிய பாக்யம் நமக்கு கிடைத்துவிடுமோ என்று பயந்து நம் சிறுவர்கள் விலகிக்கொண்டுபோவதாக நாம் எண்ணவேண்டியிருக்கிறது. இம்மாதிரியான நிலைமைக்கு காரணம் நாம்தான் என்பதில் என்ன ஸந்தேஹம். ந்யாய, வ்யாகரண, மீமாம்ஸா வேதாந்தாதி ஶாஸ்த்ரங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களே இக்கலாசாலையின் கைங்கர்யங்களில் நியமிக்கப்பட்டும், ஒவ்வொரு வருஷமும் இதில் உள்ள வித்யார்த்திகள் நல்ல தேர்வுடன் வந்துகொண்டிருக்கிறார்களேயாயினும் அதிக உத்ஸாஹத்துடன் நூற்றுக்கணக்கான வித்யார்த்திகள் சேரவேண்டிய ஓர் பெரிய கலாசாலையில் குறைந்த எண்ணிக்கையுள்ள வித்யார்த்திகளே இருக்கிறார்கள் என்றால் ஸம்ஸ்க்ருத பாஷா ஶாஸ்த்ராதிகளில் நமக்குள்ள ஆர்வத்தைப்பற்றி நாம் ஸந்தோஷப்படவேண்டிய நிலைமை காணப்படவில்லையே.

வித்யாப்யாஸகாலத்தில் தேஹயாத்ரைக்கு வேண்டிய எல்லாவித ஸௌகர்யங்களையும் செய்துகொடுத்தும் வித்யாப்யாஸம் முடிந்தவுடன் ஆத்மீகவளர்ச்சிக்குவேண்டிய ஸாத

னங்களையும் ஏற்படுத்திக்கொடுத்தும் வருகிற இக்கலாசாலை ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் அநுக்ரஹத்தினால் மேன்மேலும் வ்ருத்தியடைய வேண்டும். உண்மையில் நம் கலாசாலையிலுள்ள வித்யாப்யாஸத்துக்குவேண்டிய எல்லா ஸௌகர்யங்களும் பல ஸ்வாமிகளின் திருமாளிகைகளில்கூட கிடையாது என்று நிச்சயமாகச் சொல்லலாம். கானல்நீர்போல் பகட்டாகக்காணப்படும் இதர பாஷாபயிற்சிகளை வீணில் மனத்தில்கொண்டு நம் ஸமூஹத்தில் பலர் இப்பாஷையின் கௌரவத்தை உணரமுடியாமல் பாஷாந்தரங்களை மாத்திரமே தங்கள் குழந்தைகளை அப்யஸிக்கும்படி செய்து அவர்களுடைய வாழ்நாட்களை பாழாக்குகிறார்கள். உயர்ந்த அரிய ஸந்தர்ப்பத்தை நமக்கு ஸ்ரீமதழகியசிங்கர் அநுக்ரஹித்திருந்தும் அதை நாம் பயன்படுத்திக்கொள்ளவில்லையே என்ற வருத்தத்தினாலும் நம் ஸமூஹத்தில் சக்தியுள்ள பல பெரியவர்கள் ஸம்ஸ்க்ருதபாஷைக்குக் காட்டவேண்டிய ஆதரவைக் காட்டவில்லையே என்ற வருத்தத்தினாலும் இம்மாதிரி எழுத நேரிட்டது. மற்றைய தேசத்தவர்களும் பாஷாந்தரங்கள் கற்றறிந்தவர்களும் கூட மிகவும் கொண்டாடும் ஸம்ஸ்க்ருதபாஷையின் அபிவ்ருத்தியில் நமக்கு ச்ரத்தைக்குறைவு ஏற்படவேகூடாது. இனியாவது நம்பாஷையில் நமக்கு அபிநிவேசம் அதிகமாக ஏற்படும்படி ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் கடாக்ஷித்தருளவேண்டுமென்று மிகவும் ப்ரார்த்திக்கிறேன். பகவதநுக்ரஹத்தால் ஸாத்யமாகாதது ஒன்றுமில்லையல்லவா?

ஸ்ரீ:

நம்முடைய ஸமூஹவாழ்க்கையின் நிலைமை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

மத உணர்ச்சி அல்லது மதப்பற்றுதல்

நம்முடைய முன்னோர்களுக்கும் தற்காலத்திய சிறுவர்களுக்கும் ஏற்பட்டுள்ள முக்யமான வித்யாஸம் மதப்பயிற்சியின்மை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். தற்காலத்தில் மதம் என்பது ஒவ்வொருவருடைய ஸொந்த உரிமை என்றும் அதில் மற்றவர் தலையிடக்கூடாதென்றும் ஒரு கொள்கை இருக்கின்றது. முன்காலத்தில் அவ்வாறு இல்லை. அதை எல்லோருக்கும் தெரிவித்து அதில் பயிற்சி செய்விக்கவேண்டுமென்ற எண்ணம் மேற்கொள்ளப்பட்டது. மதத்தை அடிப்படையாக வைத்து அதற்கு அனுகூலமாய் இருக்கும்படி கல்வியும் மற்ற சாஸ்த்ரங்களும் போதிக்கப்பட்டன. அதாவது மதப்பற்றுதலை ஆதாரமாக வைத்து அதை அநுஸரித்தும் அதற்கு விரோதமில்லாமலும் இதர வ்யவஹாரங்கள் நடந்துவந்தன. அதற்குக் காரணம் என்னவென்றால் மதப்பயிற்சியினால் ஆஸ்திக்யம் உண்டாகும். ஆஸ்திக்யம் உண்டானால் நம்முடைய நடவடிக்கைகள் நல்லவழியில் இறங்கும். எவ்விதக் கல்வியாயினும் சாஸ்த்ரமாயினும் கெட்டவழிகளில் உபயோகப்படாமல் நற்குண நற்செய்கைகளை வ்ருத்திசெய்யும். கடவுளை வழிபட்டால் மனம் நல்வழியில் போய் எல்லோருடைய ஸுகத்தையும் நலனையும் நாடும். அப்படிப்பட்ட போதனை இல்லாவிட்டால் ஒவ்வொருவருக்கும் ஸ்வநலத்தையே நாடிப் பிறருக்குத் தீங்கு செய்தும் தான் பலன் அடையலாம் என்ற எண்ணம் உதிக்கும். அவ்விதம் நேராமலிருக்கும்பொருட்டு நம்முடைய முன்னோர்கள் இளம் வயதிலேயே ஆஸ்திக்யமாகிய விதையை விதைத்து அதிலிருந்து முளைக்கும்படியாக கல்வி நடை உடை பாவனைகள் முதலியவைகளை ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த ஆஸ்திக்யப்பற்று வேரூன்றிவாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் பரவி தகுந்த பலனைக்கொடுத்துவந்தது. ஸத்யம் ந்யாயம் தர்மம் பக்தி முதலியவைகள் தாமாகவே தோன்றிவந்தன. எந்த மதத்தினராயிருந்தபோதிலும் இவ்விதமான பொதுகுணங்களுக்கு ஏற்றம்

வைத்திருந்தபடியால் அவைகள் நாளடைவிலே மனத்தில் ஊன்றி அவைகளின்படியே மனிதர்களுடைய நானாவித நடவடிக்கைகளையும் நடத்தும்படி ஊக்கத்தைக் கொடுத்தன. அவைகளின் ந்யாயங்களைத் தெரிந்தவர்கள் புத்திபூர்வமாய் அவைகளுக் உட்பட்டு வந்தார்கள். தெரியாதவர்கள் ஷ்டி விதிகள் தங்களுடைய நன்மைக்காகவே ஏற்பட்டனவைகள் என்று நம்பி அவைகளுக்கு உட்பட்டு நடந்தார்கள்.

தற்காலத்தில் இவ்விதமான மதப்பயிற்சி இல்லாதபடியால் மனம் சீர்குலைந்து விபரீத மார்க்கங்களில் ப்ரவேசித்து கெடுதலை உண்டாக்குகிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள் சீக்ரத்தில் நம்பிக்கையற்ற நாஸ்திகர்களாய் விடுகிறார்கள். நம்முடைய புராதனக் கொள்கைகளும் பழக்கங்களும் ப்ரயோஜனமற்றவைகள் என்று நினைத்து அவைகளை உதாஸீனம் செய்கிறார்கள். ஏன் அவ்விதமான பழக்கங்கள் ஏற்பட்டன என்பதற்குக் காரணம் தெரியாமல் அவைகளை அலக்ஷ்யம் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் ஸ்வேச்சையாக ஆராய்ந்து தெரிந்துகொண்டு எல்லா நடவடிக்கைகளையும் நடத்தவேண்டும் என்ற புத்தி பள்ளிக்கூடங்களில் புகட்டப்படுகிறபடியால் நம் சிறுவர்களுக்கு ஒருவிதமான அலக்ஷ்யநோக்கம் உண்டாய்விடுகிறது. முன் காலத்தில் விதித்திருக்கும் சட்டங்கள் எவையும் பொருந்தாதவைகளென்றும், அல்லது இக்காலத்திற்குத் தக்கவைகள் அல்ல என்றும் சொல்லி அவைகளைப் புறக்கணித்து விடுகிறார்கள். மேல்நாட்டு நாகரீகங்கள் அபரிமிதமாகக் குவிந்து வருகிறபடியால் அவைகளை அநுஷ்டித்தால் ஸுகம் வரக் கூடுமென்று எண்ணி அவைகளிலேயே மிதந்து வருகிறார்கள்.

மனிதர்கள் ஜீவந்தராயிருக்கும் வரையில் இஹலோகபோகங்களையும் தேடிக் கொள்ளவேண்டும் என்று நம்முடைய ஶாஸ்த்ரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகளை நாம் அடக்கிவைத்துக்கொள்ளவேண்டும். மதப்பற்றுதல் அல்லது மதக்கல்வி இருந்தால் அது அந்த அவாவை நல்ல வழிகளில் செலுத்திவிடும். அப்படிக்கில்லாமல் அதையே குறியாக வைத்துக்கொண்டு நெடுகிலும் போனால் அது நம்மை இழுத்துக்கொண்டே போய்விடும். நாம் ஈச்வர ஆட்சியின் கீழ் நடந்துகொண்டு வருகிறோம் என்பதை மறக்கச்செய்துவிடும். நம்முடைய முன்னோர்கள் இதைத் தெரிந்து கொண்டு இந்த உண்மையை எல்லா நடவடிக்கைகளிலும் தெரியும்படிக்கும், இளம்வயதிலேயே நம்முடைய மனத்தில் பொருந்தும்படிக்கும் விதிகள் ஏற்படுத்திவந்தார்கள். பொழுது விடிந்ததும் பகவத்த்யாநம் ஸ்நாநம் செய்து பகவத்பூஜை செய்தல், கல்விகற்கும் போது பகவத்ஸம்பந்தமான விஷயங்களை முக்யமாகக்கற்பித்தல், தொழில்கள் வ்யாபாரங்கள் செய்வதில் பகவதாஜ்ஞைக்கு உட்பட்டு ந்யாயமாக செய்தல், கோவில்களில் கடவுளை அடிக்கடி வணங்குதல் இவைகளெல்லாம் முக்யமாகக் கருதப்பட்டு ப்ரதிதிநமும் வழக்கத்தில் கொண்டுவந்து அவரவர்களுக்கு உரிய மதப்படி பகவத் ஸ்மரணை இருக்கும்படி போதித்துவந்தார்கள். அதனால் நற்குண நற்செய்கைகள் பரவிவர இடம் கொடுத்தது. லோகத்தில் எல்லோரும் ஸுகித்து வாழவேண்டும் என்ற லக்ஷ்யத்தை மனத்தில் வைத்திருந்தபடியினால் விதிகளை மீறியும் ந்யாயவிரோதமாகவும் நடக்கக்கூடாது என்ற உணர்ச்சி மேலிட்டு வரும்படியாய் இருந்தது.

ஐரோப்பா கண்டத்தில் ஆதியில் மேற்சொல்லியபடி மதப்பற்றுதலும் மத உணர்ச்சியுமிருந்து வந்தன என்று அங்குள்ள தேசங்களின் சரித்ரங்களால் தெரியவருகிறது. பிறகு நாளடைவில் பலகாரணங்களால் அந்த நிலைமை மாறிவிட்டது. மதம் என்பது தனிப்படியான துறை என்றும், அதை மற்ற விஷயங்களில் புகும்படி விடக்கூடாதென்றும் ஒரு புதுக்கொள்கை ஏற்பட்டுவிட்டது. அதனால் ஒவ்வொரு தேசத்திலும் பற்பல சர்ச்சரவுகள் உண்டாகி கடைசியாக அந்தக்கொள்கையை உறுதிசெய்துவிட்டார்கள். ஆகையினால் அவரவர்களுடைய இச்சைப்படி நடந்துகொள்ளவேண்டுமென்றும், அவ்வித ஸ்வாதந்த்ரியம் ஏற்பட்டால் நாட்டுக்கு நன்மை உண்டாகுமென்றும், அந்த ஸ்வாதந்த்ரியத்திற்கு விரோதமாக பொ

துவிதிகள் விதிக்கக்கூடாதென்றும் ஒரு புதிய உணர்ச்சி மேலிட்டு வந்தது. அதிலிருந்து ஒவ்வொருவருடைய ஸ்வயநலத்தை மட்டில் கருதவேண்டும் என்ற எண்ணம் உதித்து அதற்குத் தடங்கல் இருந்தால் நிவர்த்திசெய்து கொள்ளவேண்டுமென்ற எண்ணம் பரவிவிட்டது. ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு மற்றவர் அழிந்தால் தனக்கு உயர்வு என்று எண்ணி ஆசையைப் பெருக்கிக்கொண்டார்கள். ஆசைக்கு இடம் கொடுத்தால் அளவில்லை என்பது தொன்றுதொட்ட காலம்முதல் அநுபவத்தில் தெரிந்த விஷயம். ஆசை மேலிட்டதனால் ஸுகங்களை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அடுத்தபடியாகக் கொண்டுவிட்டது. ஸுகங்களையும் ஸௌகர்யங்களையும் அதிகரிக்க நம்முடைய கையில் எவ்வித அதிகாரமும் உண்டென்றும், நம்முடைய பலத்தினால் எல்லாம் கிடைக்குமென்றும் நினைக்கும்படியாய்விட்டது. பலத்தினால் இறுமாப்பு உண்டாகி பலமில்லாதவர்களை அலக்ஷ்யம் செய்து துன்புறுத்தும்படி கொண்டுவிட்டது. அதனால் விரோதமேற்பட்டு மனிதர்களுக்குள் சர்ச்சரவும் ராஜாங்களுக்குள் யுத்தங்களுமேற்பட்டன. ஒருதரம் வைரம் ஏற்பட்டால் அது உள்ளத்திலேயே குடிகொண்டுவிடுகிறது. நாம் தைவத்திற்கு உட்பட்டு நடக்கவேண்டுமென்ற எண்ணத்தை மறைத்துவிடுகிறது. மனுஷ்ய பலத்தைக்கொண்டு அடாத கார்யங்களையும் தகாத விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ளும்படி தோன்றச்செய்கிறது. கடவுள் கொடுத்த புத்தியைத் தப்புவழிகளில் ப்ரயோகப்படுத்தும்படி செய்துவிடுகிறது. அதில் ருசி கண்டுவிட்டால் அதிலிருந்து நிவர்த்தித்துக்கொள்வது துர்லபமாகி விடுகிறது. தற்காலம் மேல்நாடுகளில் இவ்விதமான மனப்பான்மை மிகவும் முற்றியிருக்கிறது. அதின் நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்த்தால் தீய குணங்களே மேலிட்டிருப்பதாகச் சொல்லவேண்டியிருக்கிறது. வெளிப்படையாகச் சிற்றின்பச்சுவைகளை அநுபவித்துக்கொண்டிருந்தும் அவ்விடங்களில் ஓய்வும் அமைதியும் இல்லை என்றே சொல்லவேண்டும். ஸதா ஸர்வகாலமும் சரீரஸுகத்தை வ்ருத்திசெய்து உழைத்து அதில் த்ருப்தி கொள்ளாமலும் ஒருமுடிவில்லாமலும் மனத்தை இழுத்துக்கொண்டேயிருக்கின்றது. ஓய்வும் அமைதியும் இல்லாமற்போனால் உண்மையான ஸுகம் இல்லை என்றே சொல்லவேண்டும்.

மேற்சொல்லிய மன உணர்ச்சியைத் தடுப்பதற்கு நம்முடைய ஸம்ஸ்க்ருத நாகரீகமே ஸரியான வழி. நாம் எல்லோரும் கடவுளுக்குட்பட்டவர்கள். கடவுளுடைய க்ருபை எல்லாருக்கும் கிடைக்கவேண்டுமென்ற கொள்கையை அது போதிக்கிறது. சண்டை சச்சரவை விலக்கி விடுகிறது. பிறருக்குத் தீங்கு செய்யாமல் நமக்குக்கிடைத்ததைக் கொண்டு த்ருப்திசெய்வித்து ஆசையைக் குறைக்கிறது. ஆசை குறைந்தால் மனிதர்களுக்குள் விரோதம் உண்டாகாமல் நட்புக்கிடமாகும். எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்ற எண்ணம் நீங்கி, இருப்பதை எல்லோருமநுபவிக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும். மேல்நாட்டு நாகரீகத்தை நாம் அனுஸரித்து வந்ததனால் உண்டான கெடுதிகளை நீக்கி அவைகள் மறுபடி தலையெடுக்காமல் இருக்க தக்க பரிஹாரங்களை அடையலாம். ஆகையால் புராதநமாக ஏற்பட்டிருக்கும் ஸம்ஸ்க்ருதநாகரீகத்தில் காட்டியிருக்கும் வழிகளைப் பின்தொடர்ந்துவந்து சிறுவர்களுக்கும் அவைகளை போதித்தல் நமது கடமையாகும்.

இதர மதஸ்தர்கள் தங்களுடைய நாகரீகங்களைப் பெருமையாக நினைத்து அவைகளை வழிபடும்படி தங்களுடைய சிறுவர்களுக்குக் கற்பித்து விடுகிறார்கள். வெளியூர்களிலிருந்து நம் தேசத்திற்கு வந்திருந்தும் அவர்கள் இவைகளைக் கைவிடுவதில்லை. ஐரோப்பியர்களோ முகமதியர்களோ இந்து தேசத்திற்கு வந்து வஸித்தும் தங்களுடைய அநுஷ்டானங்களையும் கல்விப்பயிற்சிமுதலியவைகளையும், நடைஉடைபாவனைகளையும், சட்டதிட்டங்களையும் மாற்றிக்கொள்வதில்லை.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்திற்குப் பதில்

நாம் சென்றமாதத்திய ஶாஸ்த்ராநுபந்தத்தில் 'நஞ்சீயரும் ஸ்ரீஸூக்தபாஷ்யமும்' என்ற தலையங்கத்தில் ஸ்ரீஸூக்தபாஷ்யகர்த்தாவான நஞ்சீயர்தான் பெரியசீயர் என்று குரு பரம்பரையை எடுத்துக்காட்டி நிரூபித்தோம். அதற்குப் பிறகு வெளிவந்த ஸுதர்சனத்தில் விசித்ரமான முறையில் விஷயம் வெளிவந்திருந்தது.

பன்னீராயிரப்படி குருபரம்பரையைத் தனக்கு அநபிமதார்த்தப்ரதிபாதகமாயிருப்பதால் 'அபத்தக்ரந்தங்களில் தலையானது' என்கிறார்.

'பெரிய திருமுடியடைவு' என்கிற க்ரந்தத்தை தாமே முதலில் ப்ரமாணமாகக் காட்டிக் கொண்டாடவே நாம் அதிலுள்ள தோஷங்களை எடுத்துக்காட்டினோம். நாமாக வலுவில் அதை தூஷிக்கவில்லை என்பது குறிக் கொள்ளத்தக்கது. அதற்கிவர் 'இவ்வபத்தங்களெல்லாம் ப்ராசீனதாளபத்ரகோசங்களைப் பார்த்து எழுதுங்கால் லேககப்ரமாதத்தாலே வந்தன' என்கிறார். இதற்கு த்ருஷ்டாந்தமாக வேதாந்த கௌஸ்துபம் என்ற க்ரந்தத்தில் லேககப்ரமாதத்தால் வத்த அசுத்திகள் நிறைய இருக்கின்றனவென்கிறார்.

ஆனாலும்பெரியதிருமுடியடைவில்இருக்கும் பாதிதார்த்தங்களான பலவிடங்கள் ஒருவராலும் ஒருப்ரகாரத்தாலும் அஸமாதேயங்களாக இருக்கின்றன; அவற்றுள்ஓர்விஷயத்தைப்ரக்ருதத்தில்மறுபடியும் உதாஹரிக்கிறேன். பட்டர் சரித்ரத்தில் இவருக்கு தீர்த்ததிவஸம், ஜயவருஷம் கார்த்திகை மாதம் சுக்லபக்ஷத்தில் த்வாதசி' என்றும், இதையே சீராமப்பிள்ளைக்கும் தீர்த்ததிவஸமாகவும் எழுதியிருக்கிறது. இப்படியாகில் பட்டருக்குப் பிறகு சீராமப்பிள்ளை எழுந்தருளியிருந்ததாகச் சொல்லும் குருபரம்பரைகளின் கதி என்னவோ? இம்மாதிரியான இடங்களில் எப்படித்தான் பதிலளிப்பாரோ!

'பட்டருக்கு எம்பார் ஈடு முதலான வ்யாக்யானங்களும் ஸாதித்தார்' என்ற இவ்வாக்யம் நம்மிடமிருக்கும் ஆந்த்ரலிபிப் பதிப்பிலுள்ளது. இதை இன்றும் யாவரும் காணலாம். நாம் பிறரைப்போல் எவரையும் வஞ்சிக்க ப்ரவ்ருத்தியோம்.

மேலும் நலந்திகழ்நாரணஜீயர் நஞ்சீயருக்குப் பெரியவரென்றும், எம்பாருடைய தம்பி பிள்ளைக்கே எம்பாரென்று திருநாமமென்று திருமுடியடைவிலிருப்பதாகவும், அவரே நலந்திகழ்சீயருக்குத்தமப்பனாராகவிருக்கலாமென்றும் எழுதுகிறார். அந்த க்ரந்தத்த்தில் எம்பாருடைய தம்பிபிள்ளைக்கு பராங்குசதாஸரென்றே பெயர் காணப்படுகிறது; எம்பாரென்று காணப்படவில்லை. அவர் வம்சத்தில் பிற்பட்டவர்கள் எவருக்காவது எம்பாரென்று பெயர் இருக்கலாம். அவர்களின் குமாரராக நலந்திகழ்நாரணஜீயரைக்கொண்டால் நஞ்சீயருக்குப் பெரியவராக எப்படி இருக்கமுடியும்?

ஆகையால் நமக்கு பரோக்ஷமானவர்த்தங்களில் பூர்வர்களின் அபாதிதமான க்ரந்தங்களேதான் ப்ரமாணமாகும். இப்படிப்பட்ட அத்யந்தபாதிதமானவிடங்களை லேககப்ரமாதத்தால் வந்தனவென்று சொல்லுவது சரியல்ல.

ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திக்கும் ஸ்ரீஸூக்தபாஷ்யத்திற்கும் விரோதமிருப்பதாக எழுதுகிறார். இது பூர்வாபராபராமர்சத்தாலும், இதரபுஸ்தகாபராமர்சத்தாலும் வந்ததே. நன்கு பராமர்சித்தால் விரோதலேசமும் கிடையாது இதை ஸஹ்ருதயராகக் கேட்டால் விடையிறுக்க ஸித்தமாகவிருக்கிறோம்.

சிலர் 'ஸ்ரீஸூக்தபாஷ்யத்தில் 'ஆசார்யபாதைஸ்த்வேவமுக்தம்' என்றிம்மாதிரியில்லாமல் 'பராசரபட்டார்யை: ஏவமுக்தம்' என்றிருப்பதால் பட்டர் சிஷ்யரான நஞ்ஜீயர் ஷை பாஷ்யம் செய்தவரன்று என்று எழுதுகின்றனர். இதில்ஒருவிதநியமமுமகிடையாது. ப்ராயச: அநேக க்ரந்தங்களில் நாமநிர்தேசமே காணப்படுகிறது, இப்படியிருக்க இம்மாதிரி தைநந்தின பத்ரிகைகளில் கட்சிவாதங்களைப் போல் ரஹஸ்யார்த்தங்களை பத்ரிகாமூலம் வாதிப்பது அத்யந்தாநுசிதம். இருந்தாலும் இதரர்களின் அறைகூவலால் எழுதத் தோன்றுகிறது இனி இம்மாதிரி துர்வாத கோஷங்கள் ஸமுத்ரகோஷங்கள்போல் அநாதரணீயங்களே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ப்ரகீர்ணகம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

உபாயஶப்தப்ரயோகமாத்ரத்தில் அவர்களுடைய விவாதம் நிற்கிறது. மந்த்ரவர்ணத்தையநுஸரித்து உபாயத்வவ்யவஹாரமேயுக்தமென்றும் இப்படி ப்ரமாணப்ரமிதமான உபாயத்வம் பாரம்பர்யா கொள்ளப்பட்டாலும் ஹாநி ஒன்றுமில்லையென்றும் சொல்லியிருக்கின்றோம். கீழ்க்கண்ட மூன்று விஷயங்களையும் ஒப்புக்கொண்டார்களாகில் விவாதம் ஶாந்தமாயிற்று. அதற்குமேல் நமக்கு வக்தவ்யமில்லை. ஒப்புக்கொள்ளவில்லையாயின் விவாத ஶாந்தியில்லை. ஒப்புக்கொள்ளாமைக்குக் காரணத்தை உபபாதிக்கவேண்டியதும் அவர்களின் பாரம். 'ஆசார்யவிஶிஷ்ட ஸ்ரீமந்நாராயண சரணௌ' என்று மந்த்ராநுபூர்வியிராமையால் ஆசார்யனுக்குப் பிராட்டிக்குப்போல் உபாயத்வமில்லை. உள்ளதாகச் சொன்னது உபஹாஸ்யம்.

3. வாதிவிஜயபரிசிஷ்டம்

தேசிகனுக்கு ப்ரதிஷ்டாகாமதசை ஒன்றிருந்ததாகச் சொல்லுமது ஸ்வாபாவிகமான தூஷணருசிக்கு யுக்தம். ஆனால் அத்யந்தம் அப்ராமாணிகம். 'ய: க்யாதிலாபபூஜாஸு விமுக:' என்றவிடத்தில் காலபரிச்சேதம் சொல்லவில்லை. 'ஜிகீஷதோ மே கவிதார்க்கிகேந்த்ராந்' என்றவிடத்தில் ப்ரதிஷ்டார்த்தம் 'ஜிகீஷதோ மே' என்றில்லை. கல்பிக்கவேணுமென்னில், எதற்காக கல்பநம்? தூஷணத்திற்காக என்றால் உக்தரீத்யா ஸ்வருசிக்கு அது யுக்தம். பிறர் அங்கீகரிக்கும்படி ப்ரமாணமொன்று காட்டவேணுமே. எதற்காக ஜிகீஷை என்கிற ஆகாங்க்ஷையே அதைக் கல்ப்பிப்பதில் ப்ரமாணமென்றால் ஸ்வாமியே பலவிடங்களில் ஸாதித்திருப்பதை அநுஸரித்து 'ஸித்தாந்தஸ்தாபநத்திற்காக' என்று கல்பித்து அந்த ஆகாங்க்ஷைக்கு ஶமநம்பண்ணுவது அபிஜ்ஞயோக்யக்ருத்யம். 'யோ யோ ஜல்ப: ஸ ஸ ஜய:' என்றவிதன் தாத்பர்யத்தை ப்ரதிபாதிக்கவந்த 'ந விக்ருஹ்ய கதாம் குர்யாத்' என்று ஸாமாந்யேந சொல்லச்செய்தேயும் 'யதாஶக்தி நிக்ருஹ்ணீயாத் தேவதாகுருநிந்தகாந்' என்று விசேஷித்து தர்மஶாஸ்த்ரஸித்தமாகையாலே பாஹ்யகுத்ருஷ்டிகளைப்பற்ற விஜிகீஷுவாகச் சொன்ன வாக்யபரம்பரையை ஜல்பமென்றதாகவுமாம்.' என்கிற விந்த ப்ரபாவ வ்யவஸ்தாதிகார ஸ்ரீஸூக்தியின் பொருளை உள்ளபடி அறிந்தால் இவ்விஷயத்திலுள்ள அந்யதாக்ரஹணமெல்லாம் நிவ்ருத்திக்க ப்ரஸக்தி உண்டு.

இனி ஸோஹம் கவிதார்க்கிகேந்த்ராந் ஜிகீஷாமி தஸ்ய மே ஜிஹ்வாக்ரஸிம்ஹாஸநஸ்தேவ்யா: என்று பொருளில்லை. கிந்து மம ஜிஹ்வாக்ரஸிம்ஹாஸநஸ்தேவ்யா: ஸ்தா? ஜிகீஷத:—ஜிகீஷாகாமஸ்ய என்று பொருள். 'லக்ஷணஹேத்வோ: க்ரியாயா:' என்கிற ஸூத்ரத்தினால் லக்ஷணார்த்தத்தில் இங்கு ஶத்ருப்ரத்யயம் வந்திருக்கிறது. 'யதீந்த்ரவத்ஸித்தாந்தம் கோ வா வக்ஷ்யாமாணஸ்ய ப்ரபு:' என்றபடி பகவத்பாஷ்யகாரஸித்தாந்தாவலம்பநத்தினால் உண்டான வாதாஹவஶூரத்வம்

ஸ்வாம் விஜயநி ஸூந்ருதாம் ப்ரவண-
ஸ்வாந்தாந்த்ருணாநு ஶரணேயேந யாதோ |
ஸ்வாமிநு ஸமாஜேஷு ஸமேயிவஷீய
ஸ்வஸ்தி வாதாஹவ பஞ்சஶூர: ||

என்கிறவிதனால் விசதமாகிறபடி அர்ஜுந யுத்தரீதியில் நடக்கும் கர்மயோகவிசேஷார்த்தமாக உபயோகப்படுத்தப்படுகிறது என்கிறார் தேசிகன். இதில் குகல்பனைகளுக்கு அவகாசமேது?

உத்த்ருத்ய விஷ்விக்ருத்யா: ஸம்ப்ருத்ய ஹாஸ்யாஸந்தி
ஸமேஷ ஸமேஷு | கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய
காவ்யேஷு ஶ்ரீமந்தேஷ்வபி ||

என்று மஹாமீமாம்ஸகர்களே அறிந்து கொண் டாடக்கூடிய அத்புதபாவகர்பங்களான திவ்ய ஸ்ரீஸூக்திகளை இப்படி அபார்த்தம் சொல்லி கர்த்தாவான மஹாசார்யருடைய தூஷணத் திற்காகவே உபயோகப்படுத்துகிற இந்த ஸம்ப வத்தைக் காட்டிலும் கோரதரமான ஸம்பவம் உலகத்தில் ஒன்று இராது.

'நூறு பிராயம் வரையிலும் தேசிகன் வாதகோஷ்டிகளுக்குச் சென்றுகொண்டேதா னிருந்தார் என்னில், அதுவரையில் அவர் ப்ர திஷ்டாகாமதசையிலிருந்தவரேயொழிய ப்ர திஷ்டிதாசார்யதசையிலிருந்தவரல்லர் என்று இசையவேண்டியதேயாகும்'

என்றது எப்படி? வாதகோஷ்டியில் ப்ரவே சிப்பவர் யாவரும் ப்ரதிஷ்டாகாமர் என்று வ்யாப்தி உண்டோ? ஸித்தாந்தத்தை பிறர் ஆக்ஷேபித்தபோது அதை ஸஹியாமலும் மற் றவர்களுடைய ப்ரார்த்தநத்தாலும் வாதத்தில் அந்வயிப்பவர்களும் உளரே. வார்த்தகத்தில் ஸாதித்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில், '[illegible] [illegible]' என்று வாதிவிஜயத்தைத் தமக்கு ப்ராப்தமான கார்யமாகவும் அது ஸத் துக்களுக்குத் திருப்தி உண்டாகும்படி செவ் வனே நிறைவேற்றப் பட்டதாகவுமன்றோ ஸ்வாமி ஸாதிக்கின்றார். 'ஸபாபுஜங்கீஸர்வஸ் வத்தில் தொண்ணூற்றாறாம் ச்லோகம்முதல் கொண்டு தெரிவிக்கப்பட்டிருக்கும் விஷயங் களுக்கு பதில் சொல்லவில்லையே' என்கிறார் கள். அதற்குமுன்வரையில் உள்ள விஷயங் களுக்கு பதில்வந்துவிட்டது என்று இதனால் இவர்கள் அறிவிக்கின்றனர். இதற்காக இவர் களுக்கு நன்றிசெலுத்திவிட்டு மேல் சொல்லு கிறோம்.

தொண்ணூற்றாறுமுதல் உள்ள எட்டு ச்லோ கங்களில் முதல்விஷயம் இப்பொழுது மஹா ப்ராஜ்ஞர்களாக விளங்கும் ஸ்ரீபரகாலவாநா சலாஹோபிலமடாதீச்வரஸ்வாமிகள் ஸ்வயம் வாதகோஷ்[illegible]யிப்பதில்லை. இதற்கு ஹேது இவர்கள் [illegible] திலிருப்பது. ஆசையால் தேசி[illegible] ஆசார்யஸ்தாநவஹநாத் ப்ரப்ருதி வாதகோஷ்டிப்ரவிஷ்டரல்லர் என் பது. இதற்கு உத்தரம்—இவர்கள் வாதகோஷ் டியில் ப்ரவேசிப்பதற்கு என்ன ப்ரஸக்தி என்பதை ஆராயவேண்டும். ஜ்ஞாநபரீக்ஷைக் காக சிலர் ஆஹ்வாநம் பண்ணினார்களாகில் இந்த ஸ்வாமிகள் அதைப் பொருள்படுத்த வேண்டிய அவச்யமேயில்லை. தங்களுடைய யோக்யதை பெரிதென்று காட்டி இவர்களுக்கு ஸாத்யமானதொன்றுமில்லையாதலின் இனி நம்முடைய ஸித்தாந்தத்தை ஆக்ஷேபித்து ஆஹ்வாநமாயின் நமது ஸித்தாந்தம் தேசிகாதி க்ரந்தங்களால் ஸுப்ரதிஷ்டிதமாகையாலே இதற்கு இந்த க்ஷுத்ர ஆக்ஷேபங்களால் சிறி தளவும் சலநம் உண்டாகாது என்கிற த்ருடா த்யவஸாயத்தாலும் அவர்கள் செய்யும் ஆக்ஷே பங்களுக்கு பரிஹாரம் செய்ய மற்றவர்களே சக்தர்களாகையால் தாமே நேரில் வாதம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமிராமையாலும் இவர்கள் தாமே நேரில் வாதத்தில் அந்வயிக்கா மல் இருப்பர். மற்றவர்கள் அசக்தராயிருந்து வாதியும் மிகப்ரபலனாயிருந்து தாம் வாதத்தை நடத்தாவிட்டால் ஸித்தாந்தஹாநி உண்டா கும் என்ற நிலை ஏற்பட்டால் இவர்கள் ஸ்வ யம் வாதம் செய்து ப்ரதிபக்ஷநிரஸநம் செய்யப் புகுவரென்பதில் ஸம்சயமில்லை. இதனால்

[illegible] – [illegible]
[illegible] – [illegible]
[illegible] ॥

என்கிற அநுமாநத்தில் ஹேது ஸோபாதிக மென்றதாயிற்று. [illegible] ரஹிதத்வம் உபாதி.

இனி இரண்டாவது விஷயம் மஹாப்ராஜ்ஞ ரான ச்ருதப்ரகாசிகாசார்யர் ஸ்வயம் வாதம் செய்யாமலிருந்தது ச்மசாநவ்ருக்ஷத்வப்ராப் திக்கு அஞ்சியே' என்பது. இது யுக்தமன்று. இது ஸாமாந்யசாஸ்த்ரமென்றும் பாஹ்யகுத் ருஷ்டிநிரஸநத்திற்காக வாதம் செய்யவேண்டி யது விசேஷசாஸ்த்ரஸித்தமாய் ப்ராப்தமா கிறதென்றும் தேசிகன் பலவிடங்களில் ஸ்பஷ் டமாய் ஸாதித்திருக்கிறாராதலின் இப்படி யாகில் அவர் ஏன் ஸ்வயம் வாதம் செய்யவில்லை எனில், '[illegible]' என்றபடி ஸித்தாந்தஸ்தா பநாதிகாரத்தை எம்பெருமான் தேசிகனுக் குக் கொடுத்திருப்பதால் அநந்தகருடவிஷ்வக்

ஸேநாதிகள் பரஸ்பரகைங்கர்யத்தில்போல் அதில் தாம் ஆசைப்படுவது பகவதபிப்ராயாநுரோதியன்று என்று திருவுள்ளங்கொண்டவர் அவர். தேசிகன்காலத்தில் எழுந்தருளியிருந்த மற்ற பெரியோர்களுமிப்படியே என்று கண்டுகொள்வது.

இனி மூன்றாவது விஷயம் 'அக்காலத்திலுள்ள பெரியோர்கள் தாம் நேரில் வாதம் செய்யாது தேசிகனை வரவழைத்து வாதம் நடத்திவைத்தார்களென்னில், அப்பெரியோர்களுக்கு தேசிகன் சிஷ்யர் என்பது தேறிகிற்கும்' என்பது. இது எவ்விதத்திலும் அநுபபந்நம். ஸ்வயம் வாதம் செய்யாதவர்கள் சிஷ்யர்களைக்கொண்டுதான் வாதம் நடத்துவது என்ற வ்யாப்திக்கு ப்ரமாணமில்லை. சிலருக்கு ஆசார்யர்களாயிருப்பவர்களும் தம்மைக் காட்டிலும் விசிஷ்டஜ்ஞாநமுள்ள நிபுணதிசாரிகள் இருந்தால் அவர்களை ப்ரார்த்தித்து வாதம் செய்விப்பதில் ஒரு விரோதமுமில்லை. சிஷ்யர்களும் தமது ஆசார்யர்களை ப்ரார்த்தித்து வாதம் நடத்தலாம். ஸங்கல்பஸூர்யோதய ஸ்ரீஸூக்தியின் உண்மைப்பொருள் நமது 'வாதிவிஜயம்' என்கிற நிபந்தத்தில் விளக்கப்பட்டது. ஸந்நிஹிதகாலத்தில் கீர்த்திசேஷரான ப்ரதிவாதிபயங்கரமடாதீசராய் ஜகத்குருவாயிருந்த காதி அநந்தாசார்ய ஸ்வாமி காசி வித்வான்களுடன் வாதப்ரஸக்தி உண்டானபோது மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார் ஸ்வாமியை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் வாதம் செய்வித்தார். இங்கு சிஷ்யாசார்யஸம்பந்தம் எவ்விதத்திலும் இல்லை. ஆகையால் இது அத்யந்தம் அப்ராமாணிகமான விஷயம்.

4. மாபாஷ்யம்

'வாதாசனவாரிவரென வருமாபாஷ்யம் வகைபெறுநாள்' என்கிற தேசிகன் திருநாள் பாட்டு முதல்வரியில் உள்ள மாபாஷ்யம் என்கிறவிது வ்யாகரண மஹாபாஷ்யத்தைக் குறிக்கின்றது என்றார் ஒரு ஸ்வாமி. இதை மறுத்த ஒருவர் மாபாஷ்யமென்பது ஸ்ரீபாஷ்யத்தையே குறிக்கின்றதென்றும் ஸ்ரீபாஷ்யவிஷயமாய் 'திக்கெட்டும் புகழ் ஸ்ரீபாஷ்யத்தை' என்கிற மேல்வரி ஒன்றிருப்பதால் அதோடு இதற்கு பௌநருக்த்ய தோஷம் வருமே எனில், அது ஸ்ரீபாஷ்யப்ரவசநவிஷயம். இது தத்ப்ரதிஷ்டாபநபரக்ரந்தலேகநவிஷயம். ஆகையால் பௌநருக்த்யமில்லை என்றும் இப்படி உள்ள ஒரு விபாகம் 'பூர்வ நவியாவஷ்டாவிம்ஶே ஜயயுஜவழிகா' 'த்ரிம்ஶத்வாரம் ஶ்ராவிதஶாரீரகபாஷ்ய:' என்கிற தேசிக ஸ்ரீஸூக்திகளாலேயே ஸ்பஷ்டமென்றும் கூறினார். இதை நிரஸநம் செய்யுமிடத்தில் நாம் இது அத்யந்த பரிஹாஸ்யமென்றும் ஸாமாந்யமாய்ச் சொல்லிநின்றோம். 'ஸிவ ஷொரவிவஷ்ய:' என்கிற ரீதியிலே நாம் அப்படி பரிஹாஸ்யதையை விவரிக்காமல் நின்றதைப் பொறுக்காமல் எப்படி அது பரிஹாஸ்யமென்பதை ஸுவிசதம் உபபாதிக்க வேணுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். ஆகையால் அதன் விசதோபபாதநம் இப்போது செய்யப்படுகின்றது.

1. ப்ரபலமான ரூடிஶக்தியினால் மஹாபாஷ்யம் தோற்றி ஸர்வம் ஸமஞ்ஜஸமாயிருக்க பௌநருக்த்யதோஷம்வரும்படி துர்ப்பலயோகசக்தியைக்கொண்டு ஸ்ரீபாஷ்யம் என்கிற பொருள்கொள்வது பரிஹாஸ்யம்.

2. ஸ்ரீபாஷ்யத்தைப்பற்றி இரண்டு விசேஷங்களைச் சொல்லக்கருதிய கவி அவற்றின் நடுவில் விஷயாந்தரங்களைப் பேசுகிறார் என்பது பரிஹாஸ்யம்.

3. 'பேச்சொன்றுக்குச் சததூஷணியைப் பேசிய தேசிகநாள்' என்று க்ரந்தலேகநத்தைப் பற்றிய வரி தனியேயிருக்க இதுவும் அதைப் பற்றியது என்பது பரிஹாஸ்யம்.

4. அது வாதக்ரந்தலேகநத்தைப்பற்றியது. இது வ்யாக்யாநலேகநத்தைப்பற்றியது எனில் இது 'ஸைத்யகாயஷ்வீ ஹாஷ்யம் யதிவதி கயிதம் ஶஸ்வஷய்யாவ்யாக்தாரு ....' 'கவஷிதவைஷாவித்தாய—யோஷ—யாஜி' என்று ஸாரஸங்க்ரஹரூபமாய் உள்ள க்ரந்தலேகநத்தைப்பற்றிய வரி ஒன்று தனியே இருக்க வேண்டுமே என்கிற ப்ரஸங்கத்திற்கு ஹேதுவாகையாலே பரிஹாஸ்யம்.

5. பூர்வ நவியாவஷ்டாவிம்ஶே ஜயயுஜ—

வடீகா' என்றவிதில் ப்ரவசநம் விவக்ஷிதமா? ஜய்யுஜவடீகா என்றது விவக்ஷிதமா? முதல் பக்ஷத்தில் 'த்ரிம்ஶத்ஸாஹஸ்ரம் ஶ்ராவித' என்றதோடு விசேஷமில்லையாதலின் பரிஹாஸ்யதா. இரண்டாவது பக்ஷத்தில் 'டீகா விவ்ருதே வ்யாக்யாநம் க்ரியதே' என்றிப்படிக்கன்றி 'ஜய்யுஜவடீகா விவ்ருதே' என்றிப்படி பரமதநிரஸநப்ரதீதிவரும்படி ரூபகவிந்யாஸம் பண்ணப்பட்டிருக்க வெறும் க்ரந்தலேகநபரமாய் யோஜிப்பது பரிஹாஸ்யம்.

6. 'த்ரிம்ஶத்ஸாஹஸ்ரம் ஶ்ராவித ஶாரீரகபா-ஷ்யே' என்றவிடத்திலும் நாட்யவீர்யேதே நாடகாரந்தே வ்யயிதேதஸ்' என்று க்ரந்தலேகநமே வாக்யத்தில் ப்ரதாநமாய்த் தோற்றுவதால் இது ப்ரவசநமாத்ரபரம் என்பது பரிஹாஸ்யம். இப்படி நாடகலேகநமிங்கு தோன்றுவதால் இதற்காகத் தனிவரி ஒன்று இருக்க வேணுமென்கிற ப்ரஸங்கஹேதுவாஸையாலும் இது பரிஹாஸ்யம்.

7. 'ஶ்ரவணவியள' என்றவிடத்தில் அதே பாதத்தில் க்ரந்தலேகநம் சொல்லியிருக்கிறது. 'த்ரிம்ஶத்ஸாஹஸ்ரம் ஶ்ராவித' என்றவிதில் வேறு பாதத்தில் சொல்லியிருக்கிறது எனில், இது ஒன்றுக்கே கல்பாவஸாநம்வரை சிரிக்கலாம். அதுவும் அபர்யாப்தம். ஒன்றுஹரிணீவ்ருத்தம் மற்றொன்று மத்தமயூரம் என்கிற வ்ருத்த பேதம்போலவும் ஒன்று ஶாஸ்த்ரக்ரந்தத்திலுள்ளது மற்றொன்று நாடகத்திலுள்ளது என்கிறபேதம்போலவும் பாதபேதமும் ப்ரயோஜகமன்றே.

8. இனி கவிபுத்தியில் இந்த ஸ்ரீஸூக்திகள் இருந்தன என்பதற்கு ஒரு ப்ரமாணமுமிராமலிருக்க இவற்றைப்பற்றி அங்கு விசேஷம் கூறுவது, முதல் வரியில் தேசிகன் தமது அவதாரஸ்தலமாகிய காஞ்சியில் எழுந்தருளியிருந்து செய்தருளிய ப்ரவசநத்தையும் பின்வரியில் ஸஞ்சாரமாய் ஆங்காங்கு எழுந்தருளி செய்த ப்ரவசநத்தையும் பேசுகிறது போல் பரிஹாஸ்யம். உத்ருஷயிகேந.

5. வாக்யம்

'வாதாசனவரரிவரென வருமா பாஷ்யம் வகைபெறு நாள்' என்ற முதல் வாக்யத்திற்கு என்ன அர்த்தம்? அடுத்த வாக்யம் வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியறிந்திடு நாள் என்றுள்ளது' என்று தனிமலரில் எழுதினர்கள். இங்கு ஒவ்வொரு வரியையும் ஒவ்வொரு வாக்யமாக நினைத்து எழுதியது தவறென்று எடுத்துரைத்தோம். இதில் குற்றத்தை அங்கீகரிப்பதுதவிர வேறுவழியேயில்லை. ஆயினும் ஸமாதானம் சொல்வதாகக் கருதி வெகு ஆடம்பரமாகப் பேசி

> 'உத்தமமான புரட்டாசித் திருவோணமெனும் நாளானது, மாபாஷ்யம் வகைபெறு நாளாகச் சொல்லலாயிருந்தது......என்றன்றோ விவக்ஷிக்கிறார்'

என்று முடித்திருக்கிறார்கள். இதனால் என்ன ஆயிற்று? ஒரு வரியை மாத்திரம் எடுத்து அதை வாக்யமென்றது தவறுதானே. முதல்வரியும் கடைசிவரியும் சேர்ந்துதானே ஒரு வாக்யம். வாக்யத்தின் ஒரு பகுதியை வாக்யமென்று தவறாக வ்யவஹரிப்பவர் பாட்டின் ஓரடியின் பகுதியை அடியாக வ்யவஹரித்தவரைப் பழிப்பது என்? வாக்யம் அடி என்ற இச்சொற்களுக்கு முக்யப்பொருள் கொண்டால் இருவரும் தவறு உள்ளவர்களே. ஔபசாரிகமாகக்கொண்டால் மற்றவருடைய வ்யவஹாரத்திலும் குற்றமில்லை. வ்ருதா தூஷணமேன்?

(தொடரும்)

ஸ்ரீ:

செய்தி.

ஸ்ரீமதழகியசிங்கர்களின் ஸங்கல்ப மஹோத்ஸவம்.

இம்மஹோத்ஸவம் நடந்த ஆனி மீ 24௳ திருவள்ளூரில் ஸ்ரீமதழகியசிங்கர்களால் உபக்ரமிக்கப்பட்டது. அன்று காலை அபிகமநாராதநம் முடிந்தவுடன் ஸ்ரீமதழகியசிங்கர்கள் ஸ்ரீபூவராஹனையும், அத்திப்பட்டு ஸ்ரீஅழகியசிங்கரையும் ஸ்வஸ்திவாசநத்துடன் எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து அநுஜ்ஞாபுரஸ்ஸரமாக திருவாராதநம் கண்டருளப்பண்ணி அநேக ஸ்வாமிகளுடன் பூஸூக்தாதிகளை ஜபித்து ம்ருத்ஸங்க்ரஹணம் செய்தருளியாயிற்று. பின்பு ஸ்ரீஅழகியசிங்கர்களின் நியமனப்படி கோஷ்டிக்கு சந்தன, தாம்பூல தக்ஷிணாதிகள் விநியோகிக்கப்பட்டன. சத்ரசாமராதிகளுடனும் வாத்யகோஷங்களுடனும் ஸ்ரீசின்ன அழகியசிங்கர் வஸந்தோத்ஸவ பங்களாவிற்கு எழுந்தருளி அங்கு அநுஷ்டாநாதிகளை முடித்துக்கொண்டு அவ்விடமிருந்து எழுந்தருளும்போது யதிராஜஸப்ததியை சிஷ்யவர்க்கங்களுடன் அநுஸந்தித்துக்கொண்டு ஸ்ரீஅஹோபில மடத்திற்கெழுந்தருளி ஸ்ரீ பெரிய அழகியசிங்கரை தெண்டம் ஸமர்ப்பித்தாயிற்று. உடனே 'நிவஸந்து' என்றாரம்பிக்கும் ச்லோகத்தைச் சொல்லி அநேக வைதிக லௌகிக ப்ரமுகர்கள் தங்கள் ப்ரார்த்தனையைச் செய்தார்கள். ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் மர்யாதை ஸ்ரீஅழகியசிங்கர்களுக்கு நடைபெற்றது. எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கு விசேஷமான ததீயாராதனம் நடத்தப்பட்டது. இரவு ஸ்ரீகண்ணனுக்கு டோலோத்ஸவம் நடந்தது. சிஷ்யர்களுக்கு பலமந்த்ராக்ஷதையும் ஸம்மானமும் ஸ்ரீஅழகியசிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்டது. அநேக ஸ்தலங்களிலிருந்துவந்த மர்யாதை ஸ்ரீஅழகியசிங்கர்களுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது.

தையார், மாடபூஷி, ஜோஸ்யம், வித்வான், ரங்காசாரியர்,
ஸ்ரீகார்யம், ஸ்ரீஅஹோபில மடம், திருவள்ளூர்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

நந்தன௵ ஆவணிமீ-1952௵-ஆகஸ்ட்-செப்டம்பர்மீ

[தக்ஷிணாயநம்-வர்ஷ ருது - ஸிம்ஹமீ]

16—8—52	1௳	சனிக்கிழமை	...	அதிதி, ஸர்வ ஏகாதசி, ஸிம்ஹரவி 22-29. (இன்றுஸங்க்ரமண தர்ப்பணம்)
17—8—52	2௳	ஞாயிற்றுக்கிழமை	...	சூன்யதிதி.
20—8—52	5௳	புதன்கிழமை	...	● ஸர்வ அமாவாஸ்யை.
24—8—52	9௳	ஞாயிற்றுக்கிழமை	...	ஸாமோபாகர்மா.
31—8—52	16௳	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
2—9—52	18௳	செவ்வாய்க்கிழமை	...	த்ரயோதசி-சதுர்த்தசி திதித்வயம்.
3—9—52	19௳	புதன்கிழமை	...	பௌர்ணமி திதி; ப்ரதமோபாகர்மா.
4—9—52	20௳	வியாழக்கிழமை	...	மஹாளயபக்ஷாரம்பம்.
8—9—52	24௳	திங்கட்கிழமை	...	மஹாபரணி.
11—9—52	27௳	வியாழக்கிழமை	...	**ஸ்ரீஜயந்தி**; மத்யாஷ்டமி.
14—9—52	30௳	ஞாயிற்றுக்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண ஏகாதசி திதி.
15—9—52	31௳	திங்கட்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண த்வாதசி திதி, ஸ்ரீவைஷ்ணவ ஏகாதசி.

16—9—52 புரட்டாசிமீ 1௳ செவ்வாய்கிழமை ... சூன்யதிதி; கன்யா ரவி 21-39. (இன்றுஸங்க்ரமண தர்ப்பணம்)

Regd. No. M. 4437

160
18 JUL 1952
MADRAS

உங்கள் சந்தா நெம்பர்

முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் கார்யங்களுடைய நிர்வாஹத்தில் நேர்ந்த சில மாறுதல்கள் காரணமாக ஏற்பட்ட விலாஸமாறுதல் கீழே கொடுக்கப்படுகிறது:—

|
V

மானேஜர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
45, கல்விவாரு தெரு,
மயிலாப்பூர்-சென்னை-4.

The Manager,
Sri Nrisimhapriya,
45, Calvivaru Street,
Mylapore. Madras-4.

இனி சந்தாதார்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேணும். சந்தாதார்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷை விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லா கடிதப்போக்குவரத்துக்களும் மேலேகண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும்.

* * * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வ்யாஸங்கள், மற்ற விஷயங்கள், ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸங்கள் முதலியவை விஷயமான ஆக்ஷேபங்கள், ஸமாதானங்கள், அபிநந்தனங்கள் முதலியவைகள்மட்டும் கீழேகண்ட விலாஸத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

ஸம்பாதகர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
மாலோலாலயம்,
திருநாகேஶ்வரம்.

The Editor,
Sri Nrisimha priya,
Malolalayam,
Tirunagesvaram.

SCANNED

Printed by J. Rangachariar, Srikaryam Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar, No. 2. Audiappa mudali Street, Vepery, Madras, 7.